பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 05 சனிக்கிழமை (22.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 296

# மன்னார் அகதிகள் இப்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது!

## பாதுகாப்பை நிச்சயிப்பது கடினம் என்கிறது அரசு

கொழும்பு, செப்ரெம்பர் 22

**இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ள மன்னார், முசலிப் பகுதி மக்கள் இப்போதைக்கு தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாது. அவர்களது பாதுகாப்பை உறுதி செய்த பின்னரே சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்க முடியும். ஆனால், அது எப்போது சாத்தியமாகும் என்பதை முன்கூட்டியே நிச்சயித்துக் கூறுவது கஷ்டம்.**

**இவ்வாறு அரசாங்கம் - அதன் சமாதானச் செயலகம் - அறிவித்துள்ளது.**

**போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளுக்கும் சமாதானச் செயலக அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெறும் வாராந்த சந்திப்பின்போது, அரசின் மேற்கண்ட நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.**

இம்மாதம் முதலாம் திகதி இலங்கை இராணுவம் சிலாவத்துறையை தன்வசம் ஆக்கிய போதுசுமார் ஏழாயிரம் குடும்பங்கள் தமது சொந்த வாழ்விடங்களை விட்டு முசலிப் பகுதியிலிருந்து மன்னார் பகுதிக்கு இடம்பெயந்தன.

பெரும் யுத்தம் எதுவும் நடவாததால் தாம் விரைவில் திரும்பிச் சென்று மீளக்குடியமர முடியும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இந்த அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்பதில் கரிசனை காட்டி வருகிறது.

அதன் நிமித்தம், மன்னார் அகதிகள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று எப்போது மீளக்குடியமர முடியும் என்று அரசாங்க சமாதான செயலக அதிகாரிகளுடனான முந்திய சந்திப்புகளின் போது கேட்டிருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அரச சமாதான செயலக அதிகாரிகள் இவ் வாரத்துக்கான சந்திப்பின்போது அகதிகள் சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடிய காலத்தை - திகதியை - முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்பை நிச்சயப்படுத்திக் கொண்ட பின்னரே அவர்களைத் தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்க முடியும் என்று காரணம் காட்டியிருக்கிறார்கள்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஞாயிறும் திங்களும் பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், செப்.22

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்பவர்களுக்கான கப்பல்சேவை நாளை ஞாயிற்றுக்கிழமையும் மறுநாளும் இடம் பெறவிருக்கிறது.

இத்தகவலை யாழ். அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய மட்ட விளையாட்டு போட்டிகளுக்கும் மாவட்ட மட்ட விளையாட்டு போட்டிகளுக்கும் செல்லும் மாணவர்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை பயண ஏற்பாடுகளுடன் யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை- இன்றைய கப்பலில் பயணம் செய்வதற்காக யாழ்.செயலகத்தில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசு மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முறியடிக்க ஐ.நா. உரையில் ஜனாதிபதி முயல்வார்

கொழும்பு, செப்ரெம்பர் 22

**அரசுப் படைகளின் மிக மோசமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராகக் கடும் கண்டனக்குரல்கள் எழுந்துள்ள பின்னணியில், அந்தக் குற்றச்சாட்டுக்களை முறியடித்து, இலங்கை அரசுத் தரப்பின் நியாயத்தை சர்வதேச சமூகத்தின் முன் நிறுவும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது ஐ.நா. பொதுச்சபைக் கூட்ட உரையை நிகழ்த்துவார் என அறியவருகின்றது.**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை யின் 62 ஆவது கூட்டத் தொடரில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 25ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரை யாற்றுகின்றார்.

இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதியுடன் சுமார் 85 பேர் கொண்ட இலங்கை அணி ஒன்று நியூயோர்க் செல்கின்றது.

நாட்டில் வகைதொகையின்றி இடம்பெற்றுவரும் ஆள்கடத்தல்கள், ஆள்கள் காணாமற் போகச் செய்யப்படுதல், கடத்திக் கப்பம் அறவிடுதல், படுகொலைகள் என்ற மோச

(10ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடுவில் நேற்று விமானக் குண்டு வீச்சு

கிளிநொச்சி, செப். 22

முல்லைத்தீவு, விசுவமடு பகுதியில் விமானப் படையின் கிபீர் விமானங்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தின.

நேற்று நண்பகல் 12.35 மணியளவில் மக்கள் குடியிருப்புகளை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன.

தாக்குதலில் ஒன்றரை வயதான க. கபிலன் என்ற குழந்தையும் 65 வயதான சி. நாகப்பன் என்பவரும் காயமடைந்தனர்.

குண்டுவீச்சுத் தாக்குதல்களை அடுத்து முல்லைத்தீவு மற்றும் விசுவமடுப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கற்றல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் பீதியடைந்து அவலக்குரல் எழுப்பி தஞ்சம் தேடிச் சிதறி ஓடினர் .

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசம் மீதான விமானப்படை விமானங்களின் குண்டு வீச்சுத்தாக்குதல்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## சன நடமாட்டம் மிகுந்த நேரத்தில் யாழ். நகர மத்தியில் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப்.22

யாழ். நகரின் மத்தியில் கந்தப்பசேகரம் செட்டியார் வீதியில் சன நடமாட்டம் மிகுந்த நேரத்தில் நேற்று நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இனங் காணப்படாத நிலையில் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிவான் இ.த.விக்கினராஜா சம்பவம் குறித்து விசாரணை நடத்தினர்.

யாழ்ப்பணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் பாதையில் கந்தப்பசேகரம் செட்டியார் வீதிக்கு சமீபமாக பணியில் இருந்த சிப்பாய் மீது இளைஞர் ஒருவர் கிரனேட் வீசினார். சிப்பாய் திருப்பி சுட்டதில் அந்த இளைஞன் கொல்லப்பட்டார் என்று யாழ். பொலிஸார் நீதிவானுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகளுக்கு உரிய பாதுகாப்பு படைத் தளபதி நேற்று உத்தரவாதம்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ். மாவட்ட சட்டத்தரணிகளுக்கு உரிய பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படும் என்று யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி சட்டத்தரணிகளுக்கு உறுதி மொழி வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி, ஊர்காவற்துறை, பருத்தித்துறை ஆகிய நீதிமன்றங்களின் சட்டத்தரணிகள், படைத் தளபதியை நேற்று பலாலியில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அப்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாக சட்டத்தரணிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கொள்ளைகளுக்கு திட்டம் வகுத்தவர் நேற்றுக்கைது

யாழ்ப்பாணம், செப்.22

வடமராட்சியில் அண்மைக்காலமாக இடம்பெற்ற பல்வேறுகொள்ளைகளை திட்டமிட்டவரும், இடங்களை நோட்டமிட்டு தெரிவு செய்தவரும் எனக்கருதப்படும் நபர் ஒருவர் நேற்று நெல்லியடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருடன் மற்றும் இருவரும் கைதாகினர், ஒரு தொகை நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

அல்வாயை சேர்ந்த இரு பெண்கள் உட்பட சம்பந்தப்பட்ட மூவரும் நேற்று பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## வேங்கடேசப் பெருமாள் தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப்.22

ஈழத்துத் திருப்பதி என போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. முற்பகல் 10 மணிக்கு வேங்கடேசப் பெருமாள் தேரேறி பக்தர்களுக்கு அருட் காட்சி அளிப்பார்.

காலை 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 10 மணிக்கு தேரில் அருள் காட்சி தந்து, 11.30 மணிக்கு இருப்பிடம் திரும்புவார். (சிறப்பிதழ் 3ஆம் பக்கத்தில்)

## 4 நிதித் திருத்தச் சட்டமூலங்கள் மீதும் திரும்பவும் குழு நிலையில் விவாதம்

கொழும்பு, செப். 22

நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிதித்திருத்தச் சட்டங்கள் மீது மீண்டும் விவாதம் நடத்தப்படவுள்ளது.

அரசினால் முன்வைக்கப்பட்ட ஐந்து நிதித்திருத்தச் சட்டங்களுள் ஒன்று மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏனைய நான்கு சட்ட வரைவுகள் மீண்டும் குழு நிலையில் பரிசீலிக்கப்பட வேண்டும் என சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இதனால் இவ்விடயம் தொடர்பாக எதிர்த்தரப்பினால் கிளப்பப்பட்டுவந்த சர்ச்சைக்கு தீர்வு கிட்டியிருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக சபாநாயகர் தெளிவான விளக்கம் ஒன்றை நேற்று நாடாளுமன்றில் வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:-

கடந்த செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி பெரும் அமளி துமளிகளுக்கு மத்தியில் அர

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கை மின்சார சபை, யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு நாளை (23.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை மின் சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்டுள்ள நேரத்துக்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

றக்காவீதி, நல்லூர், கச்சேரி, சுண்டுக்குளி, கொழும்புத்துறை, பாசையூர், ஈச்சமோட்டை, விஞ்ஞானபீடம் ஆகிய பிரதேசங்கள். இதனால் மின்பாவனையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

*பிரதேச மின் பொறியியலாளர்,*
*இலங்கை மின்சாரசபை,*
*யாழ். பிரதேச அலுவலகம், சுன்னாகம்.*
*2007.09.21*

**சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்.**
**இலங்கை மின்சார சபை.**
(சி-53780)

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை கைலாயபிள்ளை

**(இளைப்பாறிய அதிபர், ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்)**



வேலணையைப் பிறப்பிடமாகவும், ஆனைப் பந்தியை வாழ்விடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான சங்கரப்பிள்ளை கைலாயபிள்ளை 20.09.2007 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அமரர்கள் சங்கரப்பிள்ளை-நாகமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், அமரர்களான பொன்னம்பலம்-செல்லம்மா தம் பதியரின் மருமகனும், அன்னப்பிள்ளை (அமரர்), இராசரத்தினம் (அமரர்), இராசையா (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தம்பியும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், அனுஷா, ரஜிந்திரன், சசீதா, பகீரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மரட்ணம், விேனாதா, செழியன், வரதா ஆகியோரின் மாமனும், தயந்தினி, அஜந்தினி, தனுசன், சுதன், மிதுனா, கவீனா, கஜானா, நிருசன், ஆரணன் ஆகியோரின் பேரனும், பொ.நடேசன் (அமரர்), பொ. இராசரத்தினம் (அமரர்), Dr. சந்திரசேகரம், இந்திரா சொர்ணலிங்கம், சூரியா - குமரகுரு ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சறோஷ் மகால் 240, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி. T.P 0776492570,*
*ரஜிந்திரன் - 4166897963,*
*பகீரதன் - 6474023307.*

தகவல்:
**சூரியா - குமரகுரு**
*(மைத்துனி).*
(66057)

## திருமதி கயிலாசபிள்ளை பரமேஸ்வரி

நல்லூர், சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கயிலாசபிள்ளை பரமேஸ்வரி நேற்று (21.09.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கயிலாசபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பசுபதி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் செல்வராசா, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், கணேசலிங்கம் (இளைப்பாறிய எழுதுனர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்), பரமலிங்கம், காலஞ்சென்ற யோகராணி மற்றும் சங்கரலிங்கம் (வலயக்கல்விப் பணிமனை, சாவகச்சேரி), யோகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், வாமதேவி, மாலினி, பாலசிங்கம், புஸ்பநாயகி, சந்திரலேகா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நர்ளை ( 23.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*46/2, அரச வீதி,*
*நல்லூர்.*
(66062)

தகவல்:
**க.சங்கரலிங்கம்**
*(மகன்).*

## தாமோதரம்பிள்ள்ள இராசநாயகம்

*(உரிமையாளர், கிரியோன் கூல்பார்)*



சாவகச்சேரி, கோயில்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை இராசநாயகம் நேற்று (21.09.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராஜா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் மனோரஜனியின் அன்புக் கணவரும் சேயோன் (ஜேர்மனி), கிருத்திகா (லண்டன்), லாவண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் நீலாம்பரி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் அக்சயன், கிருசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் குணரத்தினம், கனகாம்பிகை, காலஞ்சென்ற கந்தராசா மற்றும் செந்தில் வடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிற்சபேசன் மற்றும் சவுந்தரரஜனி, நடனசபேசன் (ஜேர்மனி), சுகந்தினி (ஜேர்மனி), ஞானசபேசன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 23.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**'லாவண்யம்'**
**கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி.**
(66069)

**தகவல்:**
**மனைவி - ரஜனி,**
**பிள்ளைகள்.**

## விற்பனைக்கு

புறொயிலர், கல்பேர், ஊர்ச்சேவல் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: தாரன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

சொந்தப்பண்ணைக்கென வளர்க்கப்பட்ட பிறீமா முட்டையிடும் இன கோழிக் குஞ்சுகள் (சகல தடைமருந்துகளும் கொடுக்கப்பட்டது.) 2 மாத வளர்ச்சி கொண்டது விற்பனைக்குண்டு

தொடர்பு:- ஞான செந்தூரன்.
அபிராமி மஹால்,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
T.P. :- 021 226 3403.

## கும்பம்.com
Kumbam.com.

உலகெங்கும் பிரிந்து வாழும் தமிழ் நெஞ்சங்களை இணைக்கும் விவாகத்தளம் www.kumbam.com ஆகும். எம்மிடம் பலதரப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு பதிவுகள் உள்ளன. நீங்களும் இலவசமாக பார்க்கலாம், பதியலாம். (முதல் முறையாக தமிழில் வெளிவரும் விவாகத் தளம்)

தொடர்புகளுக்கு: கனடா:- 001 416 273 7780,
லண்டன்:- 0044 208 123 2093,
இலங்கை:- 0094 786 250 885.

## தவறிவிட்டது

273, கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த தியாகராசா சுதன் என்பவருடைய தே.அ.அட்டை (891412371V) நேற்று (21.09.2007) கஸ்தூரியார் வீதிக்கும் சிவன் பண்ணை வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779848893 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.

**பெண் வேலையாள் தேவை**
நேரில் தொடர்புகொள்ளவும்.
*இன்று (22.09.2007) சனி - 3 மணி.*

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

**எமது சோமாஸ்கந்தன் சனசமூக நிலைய வளர்ச்சிக்காக நாளை (23.09.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நீர்வேலிச் சவாரித்திடலில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெற உள்ளது. போட்டியாளர்கள் அனைவரும் ஞாயிற்றுக்கிழமை ஒரு மணிக்கு திடலில் பதிவு செய்து கொள்ளவும்.**

(66068) **- நிர்வாகத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



யா/ ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயத்தில் 19.07.1982 முதல் 05.06.1987 வரை அதிபராகக் கடமையாற்றிய சங்கரப்பிள்ளை கைலாயபிள்ளை 20.09.2007 வியாழக்கிழமை கனடாவில் அமரராகி விட்டமையையிட்டு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,*
*யா/ ஆனைப்பந்தி மெ.மி.*
*வித்தியாலயம்.*
(66070)

# மரண அறிவித்தல்

## பொன்னர் பரமலிங்கம்

கரணவாய் வடக்கு, நவிண்டிலைச் சேர்ந்த பொன்னர் பரமலிங்கம் 19.09.2007 புதன் கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சர்வானந்தம், நித்தியானந்தம் (ராசு), சிவானந்தம் (சிவா), விமலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[illegible]
[illegible]
**ராசு** *(பெரியதம்பிரான் கோயில் பூசகர்),*

## கலாநுணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவனான மகாதேவன் விநோகாந்தன் அவர்களின்



## மிருதங்க இசை அரங்கேற்றம்

**காலம்:** *நாளை (23.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி*
**இடம்:** *ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம், நல்லூர்.*

*தலைவர்:*
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன்**
(உப அதிபர், ஸ்கந்தவரோதயா கல்லூரி)

*பிரதம விருந்தினர்:*
**திரு.அ.பஞ்சலிங்கம்**
(ஓய்வுபெற்ற அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி)

*சிறப்பு விருந்தினர்கள்:*
**செல்வி பாக்கியலட்சுமி நடராஜா**
(தலைவர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
**திரு.எம்.சிதம்பரநாதன்**
(விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

*கௌரவ விருந்தினர்*
**திரு.அ.ஈஸ்வரநாதன்** *(B.Com (Hons), Dip. in Edu.)*
(அதிபர், யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரி)

*மதிப்பீட்டுரை:*
இசைக்கலைமணி **திருமதி சிவை குகநேசன்**
(விரிவுரையாளர், யா.தே.க.கல்லூரி, (ஸ்ரீசாயி கலைக்கழகம்)

### அரங்கிசைக் கலைஞர்கள்

பாட்டு: இசைமாணி **தவநாதன் றொபேட்**
வயலின்: வித்துவான் **அ.ஜெயராமன்**
மிருதங்கம்: **மகாதேவன் விநோகாந்தன்**
கடம்: கலாவித்தகர் **நா.மாதவன்**
கெஞ்சிரா: கலாவித்தகர் **வி.ராகவன்**
முகர்சிங்: கலாவித்தகர் **து.சுரேஷ்**
தம்புரா: **க.ரஜீவன்**

கலா ரசிகப் பெருமக்கள் அனைவரும் வருகைதந்து அரங்கேற்ற நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

திரு.திருமதி மகாதேவன்
குடும்பத்தினர்.

# NEW SCIENCE HALL

## Physics

## Day Batch 2008

* பருத்தித்துறை, நெல்லியடி, காரைநகர், தீவுப்பகுதி போன்ற தூர இடத்து மாணவரின் போக்குவரத்து வசதி கருதி வாரத்தில் இரு நாள்கள் மட்டும்.

**Past Paper Class**
**(1996 - 2007)**
சனி - ஞாயிறு 9 - 11 a.m.
மின்புலம் **Theory**
சனி ஞாயிறு 11 - 12.30
ஆரம்பம் 29.09.2007

**2008, 2009 Batch**
சடப்பொருள்களின் இயல்பு
திங்கள், செவ்வாய் 4.15, 5.15
ஆரம்பம்: 24.09.2007

By. R. குகன்

## நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு தினம்

| மலர்வு | | இறப்பு நினைவலையில் |
|---|---|---|
| 18 | | 22 |
| 08 |  | 09 |
| 1887 | | 1961 |

அமரர் **அத்தியார் அருணாசலம்** J.P.

அத்தியார் என்ற வள்ளலின்
சக்தியால் உருவான இக்கல்லூரி
வளமோடு வாழ ஆராதிக்கும்

'அத்தி அகம்',
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
(65000)

மருமகள்: பாலா ரீச்சர்
திரு.திருமதி ந.சிவகுமாரன்
(பேரப்பிள்ளைகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ
ஸ்ரீ ராம ஜெயம்

# யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 22.09.2007 சனிக்கிழமை

## வண்ணப் பொற்றேரேறி வருநாள்!

பார்த்த சாரதியே! வேங்கடேஸ்வரா!
தேர் இவர்ந்து கம்பீரமாக வருக
பல்லியம் இயம்ப வருக
தேர் ஓட்டுவதில் தேர்ந்தவனே!
எங்கள் வாழ்க்கைத் தேரைச்
செலுத்திட முடியவில்லை;
விண்ணப்பிக்கின்றோம்
வேண்டுதல் செய்கின்றோம்
சாரதியாக வருக!
செப்பனிட்ட சீரான பாதையிலெம்
வாழ்க்கைத் தேரைச் செலுத்துக.
வண்ணப் பொற்றேரேறி வருநாள்
இவ்விண்ணப்பம் திருச்செவி ஏற்றுக!

கார்த்திகேசு,
(நல்லூர்).



## துன்பங்களை நீக்கிட நாராயணன் பாதம் நாடுவோம்

காத்தல் கடவுளாக, கோகுலக்கண்ணனாக, மணிவண்ணனாக, ஆயர்பாடி நந்தனாகத் தன்னை நாடிவரும் அடியவர்களின் துன்பம் நீக்கி வேண்டும் வரங்களை ஈந்தருளும் வள்ளலாக விளங்கும் வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளின் தேர்த்திருவிழா-பெருவிழா-இன்று வெகு விமர்சையாக நடைபெறுகிறது.

பகவானைப் பூரணமாக நம்பி மனதார வழிபட்டு தம்மை அர்ப்பணிப்போரை என்றுமே அவன் கைவிட்டதில்லை. குசேலரின் குடும்பநிலையை அவர் கேட்காமலே உயர்த்திய பகவான், திரௌபதிக்கு ஆபத்பாந்தவனாக வந்து நல்லருள் புரிந்தான். தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்ற பிரகலாதனின் கூற்றிற்கு செவிமடுத்து தூணில் இருந்து வெளிப்பட்டு அப்பாலகனைக் காத்தான்.

'மையோ மரகதமோ மறி கடலோ மழைமுகிலோ' என கருவண்ணத்தைக் காணும் இடமெல்லாம் கண்ண னைக் கண்டு மகிழ்ந்தனர் கவிஞர்கள்.

அன்பே தகழியாக ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியாய், ஞானச்சுடரை ஏற்றி பகவானை வழிபடுவோம்.

எமது துன்பங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனி போல மறையப் பிரார்த்திப்போம்

தேர் ஏறி வரும் பெருமாள் எமது வினைகளை நீக்கி அருள் புரிவானாக.

சர்வத்திர கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா!கோவிந்தா! வந்து அருள்புரிந்திடுவாய்!

ஆறங்காவலர் சபை,
யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜ பெருமாள் தேவஸ்தானம்.

## பெருமாளைப் பணிந்தேத்திப் பெருவாழ்வு பெறுவோம்

எல்லாம் வல்ல காத்தற் கடவுளான ஸ்ரீமத் நாராயணன், தன்னை வழிபடும் அடியவர்களின் அல்லல் களைய ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் என்னும் நாமத்துடன் எழுந்தருளி வீற்றிருந்து அருள் புரியும் தலம்தான் வண்ணை பெருமாள் கோயில். இந்த ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா.

வானளாவ உயர்ந்த இராஜ கோபுரத்துடன் மணிக்கோபுரமும் சேர்ந்து கம்பீரமாகக் காட்சி தரும் இந்தக் கோயிலில் வருடந்தோறும் புரட்டாதி மாத அமாவாசையை அடுத்து வரும் திருவோண நட்சத்திர நன்னாளைத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு பத்து நாள்கள் திருவிழா நடைபெற்று வருகின்றது. இன்று பெருமாள் தேரில் எழுந்தருளி அருட்காட்சி தருகிறார்.

முதல் நாள் சூரிய பரிதிச் சேவையில் கொடியேற்றம் நிகழ்ப்பெற்று அன்னச் சேவை, சேஷ சயனச் சேவை, கருட சேவை, அனுமச் சேவை, பூந்தண்டிகைச் சேவை, கஜேந்திர சேவை, வெண்ணெய்த்தாளி சேவை, அஸ்வாரூட சேவை, இரதோற்சவம், தீர்த்தோற்சவம், சந்திர பிறைச் சேவை, வதிரி விருட்ஷ யோக நாராயண உற்சவம் என்று தொடர்ந்து நிகழும்.

இறுதியாக ஆஞ்சநேயர் அபிஷேக பொங்கல் உற்சவத்துடன் விழா நிறைவடையும் . இவ்வாலய தல விருட்சம் பலா. இப் பலா மரத்தடியில் ஒரு பெரியவர் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் விக்கிரத்தை வைத்து வணங்கி வந்ததாகவும் அதுவே ஆலயமாகியது என்றும் ஓர் ஐதீகமிருக்கிறது. ஈழத்து வைஷ்ணவ ஆலயங்களுள் சிறப்புடன் விளங்கும் இங்கு பண்டாரவளைச் செட்டிப்பிள்ளைகள் எனப்படும் பத்ம சாலச் செட்டிப் பிள்ளைகள் ஆலய பரிபாலனஞ் செய்கின்றனர். வைகாசன முறைப்படி கிரியைகள் நடைபெறுகின்றன.

பிருந்தாவனம், கோகுலம், துவாரகை முதலியவற்றில் ஸ்ரீ கிருஷ்ணனாகவும் திருப்பதியில் ஸ்ரீநிவாசனாகவும் சிதம்பரத்தில் கோவிந்தராஜனாகவும் ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதனாகவும் மதுரையில் அழகராகவும் திருவனந்தபுரத்தில் பத்மநாபனாகவும் அருள்பாலிக்கும் திருமால் யாழ்.வண்ணையில் வேங்கடேச வரதராஜப் பெருமாளாக அருளைப்பொழிந்து கொண்டிருக்கின்றார்.

இன்றைய தேர்த்திருவிழாவில் பங்கேற்றுப் பெருமாளின் இன்னருளுக்குப் பாத்திரமாகி கண்ணனைக் கண்ணாரக் கண்டு களித்துப் பேரானந்தப் பெருவாழ்வுக்கு வழி சமைப்போமாக.

''கண்ணனைக் கைதொழக் கடுவினையகலும்''

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

## ஆலய மஹோற்சவ குருவின் ஆசியுரை

காத்தற் கடவுளான திருமால் வண்ணையம்பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஆலயம் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயமாகும்.

இன்று இவ்வாலயத்திலே தேர்த்திருவிழா. 'அக்கிரமங்களையும் அராஜகத்தையும் அநியாயங்களையும் அசுரத்தனத்தையும் அழிப்பதற்காக யான் யுகந்தோறும் அவதாரஞ் செய்வேன்' என்று கீதையில் கூறிய கண்ணன், இன்று ஸ்ரீதேவி பூமிதேவி சகிதம் வேங்கடேச வரதராஜப் பெருமாளாக சித்திரத் தேரேறி வீதி வலம் வருகின்றான். இது ஒரு கண்கொள்ளாக்காட்சி.

இனிமேல் கெட்டவை யாவும் ஒழிந்து மனித வாழ்வில் சாந்தி, சமாதானம் நிலவி அமைதியும் ஆனந்தமும் நிலையான இடம்பிடித்து எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று பெருமாளைப் பிரார்த்தித்து ஆசி வழங்குவதில் பேருவகையடைகிறோம்.

இலங்கை வாழ் மக்கள் எல்லோருமே துன்பத்திலிருந்து விடுபட்டு சுற்றஞ் சூழ இன்பத்தையே நுகர்ந்து நிம்மதியுடன் நல்வாழ்வு வாழவேண்டுமென்று சர்வ வல்லமையும் பொருந்திய ஸ்ரீ வேங்கடேசனைப் போற்றிப் பிரார்த்தித்து வேண்டி நிற்கிறோம்.

இந்த மஹோற்சவத்தில் அடியேனும் கலந்து சேவை செய்யக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியுடன் எம் பெருமானின் திருவருளை வியந்து போற்றுகின்றோம்; நல்லாசிகளை வழங்குகின்றோம்.

மேன்மைமிகு பரந்தாமன் புகழ் பாரினில் சிறந்தோங்கட்டும்!
''லோகா சமஸ்தா சுகிர்ணோ பவந்து''
கோவிந்த நாம சங்கீர்த்தனம்; கோவிந்தா! கோவிந்தா!!

ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
மஹோற்சவ பிரதமகுரு.
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயக் குரு).

## நியாயத்தை நிலைநாட்டுவதற்கு தேரேறி வருகிறான் கண்ணன்

வண்ணை வரதராஜப் பெருமாள் இன்று சித்திரத் தேரிலே ஆரோகணித்து சிங்காரப் பவனி வருகின்றார். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யும் பரந்தாமன் இன்று ஸ்ரீதேவி பூமிதேவி சமேதராக அழகிய ரதத்திலே ஆரோகணித்துவரும் அற்புதக் காட்சி கண்கொள்ளாக் காட்சி!

பெருந்திருவிழாவிலே தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். வேங்கடேச வரதராஜக் கடவுள் காத்தல் தொழில் புரிபவர். ஆனால் , தீயவர்களையும் தீமை செய்பவர்களையும் அழிப்பதற்கு அஞ்சமாட்டார். அதர்மம் மேலோங்கி தர்மம் குன்றும்பொழுது அவதாரமெடுத்து தர்மத்தை நிலை நாட்டுவார்.

அந்த வகையில் அன்று அதர்மத்தை அழிக்க, அர்ச்சுனனுக்குத் தேரோட்டியாக இருந்த கண்ணன் இன்று அழகிய தேரிலே அமர்ந்து அநியாயத்தை அழித்து நியாயத்தை நிலை நாட்டப் புறப்பட்டுவிட்டான்.

ஈழமண்ணில் வாழும் அனைவரும் சுபீட்சம் பெற்று சுகமான இன்பவாழ்வு கைவரப்பெற்று சாந்தியும் சமதானமும் கொண்ட அமைதியான மகிழ்ச்சியும் மனநிம்மதியும் அடைந்து சந்தோஷ வாழ்வு வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பணிந்து நல்லைக் குருமணியின் திருவடிகளை வழுத்தி திருமாலின் கமல மலர்ப்பாதம் தொழுது உளமாரப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.


பூரணி நகை மாடம்
Purane Nakai Maadam
Genuine 22Kt Jewellery
Manufacturing Jewellers
1/4, KASTHURIAR ROAD, JAFFNA.

ஒரே கூரையின் கீழ்
சிறி நதியா நகை மாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சானுயா சிறிரூபா நகைமாளிகை
இணை நிறுவனம்: சிறிநதியா நகைமாளிகை,
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மொத்த சில்லறை விற்பனையாளர்
ஏகாம்பரம் புடைவை மாளிகை
(72) 9, பெரிய கடைவீதி,
யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22kt Gold Jewellery
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நவயுகம் மகிழும் புதுமலர்ப்பூங்கா.
புதுமணத்தென்றலில் பூத்து நிற்கும்
நவநாகரிக நகை உலகம்
சிறி மீனாட்சி தங்க மாளிகை
இல.187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

விழாசிறப்புறவாழ்த்துவோர்:
UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
Ph:021-4590720,0773134737.
கணனி,
கணனி உதிரிப்பாகங்கள்
BRAND NEW ASSEMBLED NOW AVAILABLE

பத்திரிகை, பல சரக்கு விற்பனையாளர்
சிவா ஸ்ரோர்ஸ்
59, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 4590684

கிருஸ்ணா நகை மாளிகை
Krishna Jewellary
Manufacturers of Gold Jewels
கிளை நிறுவனம்: கிருஷ்ணா அடைவு கடை,
370, K.K.S வீதி, யாழ்ப்பாணம்..
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5046

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு சிறந்த இடம்
சானுகா நகைமாடம்
200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3700

மென்மைக்கு மெருகேற்றும்,
இளமைக்கும் எழிலூட்டும்....
சிறி சிவாஞ்சனா நகையகம்
149A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

துர்க்கா நகைப்பூங்கா
தங்கப்பவுண் நகை வியாபாரம் ஓடர் நகைகள்
குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியை அமைக்கும், அழிக்கும் திறமை விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாவிடமா?

## சிங்களத் தலைமைகள் நம்புகின்றன என்கிறார் சுரேஷ்

இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் திறன் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கே உண்டு. இதனை கொழும்பு நம்புகின்றது எனத் தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இந்த நாட்டில் அரசை அமைக்கவும், கவிழ்க்கவும் புலிகளின் தலைவர் பிரபாகரன் தேவைப்படுகின்றார் என்பதை சிங்களத் தரப்புகள் முழுமையாக நம்புகின்றன. அதற்கமையவே செயற்படுகின்றன என தெரிவித்துள்ளார் தமிழ்க் கூட்டமைப்பின் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது புலிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் பணப் பரிமாற்றம் இடம்பெற்றது எனக் கூறப்படுகின்றமை தொடர்பில் விசாரணைக்குழு அமைக்க வேண்டும் எனக் கோரி வியாழக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே சுரேஷ் எம்.பி. மேற்கண்டவற்றைக் குறிப்பிட்டார்.

அவரது உரையின் முழுவடிவம் வருமாறு:-

பலகோடி ரூபாவை விடுதலைப் புலிகளுக்கு கொடுத்து, அதன் மூலம் தான் இன்றைய ஜனாதிபதி மஹிந்த கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வென்றார் என்றும் - இது தொடர்பாக தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும் என்றும் சிறிபதி சூரியராய்ச்சி எம்.பி. கேட்டதற்கிணங்கவே இந்த விவாதம் நடக்கின்றது என நாங்கள் அறிகின்றோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறு பணம் கைமாறப்பட்டதா இல்லையா என்பதெல்லாம், ஜனாதிபதிக்கும், அவருக்கு நெருக்கமானவர்களுக்குமே வெளிச்சம். அன்று ஜனாதிபதியை வெல்லவைத்த அமைச்சர்கள்தான் இன்று ஜனாதிபதிக்கெதிரான குற்றச்சாட்டையும் கொண்டு வருகின்றனர்.

எனவே, இதில் உண்மையுமிருக்கலாம் அல்லது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் பழிசுமத்தப்படலாம். ஆனால், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு இது தொடர்பான எந்த விதமான நம்பிக்கைக்குரிய தகவல்களும் கிடைக்கவில்லை. எனவே, நாம் இவ்விவகாரத்தில் கலந்துகொள்வதைத் தவிர்த் துக் கொள்கின்றோம்.

### சிங்களக் கட்சிகள் தமிழ் இன எதிர்ப்பையே ஆட்சிக்கு வரும் ஆயுதமாக பயன்படுத்துகின்றன

ஆயினும், ஒருவிடயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சிங்கள அரசியல் கட்சிகள் அதிகாரத்திற்கு வருவதற்கு ஆரம்பம் முதல் தமிழ் இன எதிர்ப்பு என்ற ஆயுதத்தையே பாவித்து வந்துள்ளன.

சிங்களத்தை அரச கரும மொழி ஆக்குவதில் பண்டாரநாயக்கவிற்கும் ஜே.ஆருக்கும் இடையில் போட்டி ஏற்பட்டது. வாகனங்களில் சிங்கள 'ஸ்ரீ', தமிழ் மாணவர்களுக்கெதிரான தரப்படுத்தல் இவ்வாறான நடவடிக்கைகள் யாவும் தேர்தல் வெற்றிக்காக சிங்கள அரசியல் கட்சிகளால் பயன்படுத்தப்பட்ட வியூகங்கள் ஆகும்.

தமிழருக்கெதிரான முழு இனத்துவேசமும் குறுகிய அரசியல் லாபங்களுக்காக சிங்கள அரசியல் தலைவர்களால் பாவிக்கப்பட்டன. சிங்கள அரசியல் தலைவர்களின் மூடத்தனமான நடவடிக்கைகளே கடந்த 30 வருடகால யுத்தத்திற்கு காரணமாகும். இன்றுகூட அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு விடுதலைப் புலிகளோ அல்லது பிரபாகரனோ இவர்களுக்குத் தேவைப்படுகின்றது. ''கொழும்பில் யார் அதிகாரத்திற்கு வருவதென்பதை சிங்கள மக்கள் தீர்மானிப்பதில்லை. அதனை பிரபாகரன்தான் தீர்மானிக்கின்றார்'' - என்று அனுரா பண்டாரநாயக்க முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டார். அதில் உண்மையுமிருக்கலாம்.

### அரசை ஆக்கவும் கவிழ்க்கவும் புலிகள் என்ற பெயர் தேவைப்படுகிறது

ஆனால், இன்று பார்த்தீர்களானால் புலிகளை கிழக்கில் வென்றுவிட்டோம் என்று கூறி அதிகாரத்தில் ஒட்டிக்கொண்டிருக்க ஜனாதிபதி முயற்சி செய்கிறார். 'புலிகளுக்குப் பணம் கொடுத்துதான் பதவிக்கே வந்தார்' என அவரைக் கவிழ்க்க விரும்புவோர் சொல்கின்றார்கள். மொத்தத்தில் அரசை, ஆக்கவும், கவிழ்க்கவும், புலிகள் என்ற பெயரோ அல்லது பிரபாகரன் என்ற பெயரோ தேவைப்படுகின்றது.

எனவே, எவ்வளவு மலினப்பட்ட அரசியலை நீங்கள் நடத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்று சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா?

பணவீக்கம், வாழ்க்கைச்செலவு உயர்வு, வேலையில்லாப் பிரச்சினை, மக்கள் வாழவே முடியாத சூழ்நிலை, குழந்தைகளுக்கு பால்மா இல்லை, நாளாந்தம் விலையேற்றம், கையில் பணமில்லை, இன்னும் சிலமாதங்களில் பட்டினிச் சாவுகளையும் எதிர்பார்க்கலாம். இவ்வளவு மோசமான பொருளாதாரச் சூழலில் நாடு சிக்கியுள்ளது. இவற்றுக்கான அடிப்படைக் காரணமென்ன? - யுத்தம்.

15 கோடியே 60 லட்சம் ரூபா நிதி இந்த வருடம் நாட்டை அழிக்கவும், கொலைகளைச் செய்யவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது பிழையென யாராவது சிந்திக்கின்றீர்களா? இதனால்தான் மக்கள் இவ்வளவு துன்பத்திற்குள்ளாகின்றார்கள் என்று யாராவது பேசுகின்றீர்களா? ஆனால், 'மிக்' 27 வாங்கியதில் ஊழல், ஆயுதங்கள் வாங்கியதில் ஊழல் என தெரிவுக்குழு அமைக்க சண்டை பிடியுங்கள். எந்தத் தெரிவுக் குழுவால் என்ன லாபம்? அரசின் பதவிக்காலம் முடியும் வரை தெரிவுக்குழுவின் கால எல்லையும் நீடித்துக்கொண்டே போகப்படும். இதுதான் இங்கு நடக்கும் வழக்கம்.

### இந்த நாட்டில் யுத்தம் ஒரு வியாபாரம்

எந்த முப்படைத் தளபதி கமிஷன் வாங்கவில்லை. யார் ஊழல் புரியவில்லை. எந்தப் பாதுகாப்புச் செயலாளர், வந்த மாதிரியே திரும்பிச்செல்கிறார்? இலங்கையில் மாத்திரமல்ல பலபேருக்கு வெளிநாடுகளிலேயே வீடுகள் உள்ளன. அரசிலும், முப்படைகளிலும், மேல்மட்டத்தில் இருப்போருக்கு இங்கு யுத்தம் என்பது வியாபாரம். கொழுத்த காசு.

இவர்கள் சிங்கள இளைஞர்கள் கொல்லப்படுவதைப் பற்றியே கவலையடையாதவர்கள், தமிழனைக் கொல்லவா பின்நிற்பார்கள். எனவே, அநாகரிகமான - வெட்கங்கெட்ட - இனவாத யுத்த அரசியலைக் கைவிட்டு, இந்த நாட்டின் வளர்ச்சிக்காக, உங்களை நம்பி வாக்களித்த இந்த மக்களின் உயர்ச்சிக்காக அரசியல் செய்யுங்கள்.

சர்வாதிகாரி இடி அமீனைவிடக் கொடூரமான கொலைக் கலாசாரத்தைக் கைவிட்டு, தமிழ் மக்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் உங்களுக்குரிய அவ்வளவு உரிமைகளும் அவர்களுக்கும் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் எண்ணிக்கையில் அதிகமிருப்பதால் நீங்கள் தொடர்ந்தும் ஏனைய தேசிய இனங்களை இடையூறு செய்யலாம் - அடிமையாக வைத்திருக்கலாம் என்று கருதினால் அது தவறு.

உலகம் பல மடங்கு முன்னே போய்விட்டது. நீங்கள் இன்னும் பிரபுத்துவ காலத்திலேயே இருக்கின்றீர்கள். தயவு செய்து உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். உங்களை நீங்கள் மாற்றிக்கொள்ளாவிட்டால், உண்மையான பிரச்சினைகளை விட்டு இனவாதிகளாகவே தொடர்ந்தும் இருப்போமென அடம் பிடிப்பீர்களாயின், அனுரா பண்டாரநாயக்கா முன்னர் கூறியமை போன்று பிரபாகரனே கொழும்பின் தலைமைத் துவத்தைத் தொடர்ந்தும் தீர்மானிப்பவராக இருப்பார்.



### எப்போதாவது யுத்தத்தில் வெல்ல முடிந்ததா?

ஜே.ஆர்.ஜெயவத்தனா, ஆர்.பிரேமதாஸ, டி.பி. விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க போன்ற முன்னாள் ஜனாதிபதிகளும், இவர்களது காலகட்டத்தில் பதவி வகித்த பல்வேறு இராணுவத் தளபதிகளும் யுத்தம் புரியவில்லையா? யுத்தத்தில் வெல்லத்தான் முடிந் ததா?

சிங்கள இளைஞர்களும் தமிழ் இளைஞர்களும் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டதுடன் அப்பாவிப் பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டார்கள். பதவிகளில் இருந்து ஓய்வு பெற்ற முப்படைத் தளபதிகளும் ஓய்வு பெற்றபின் என்ன கூறுகின்றார்கள்? ''இது ஓர் அரசியல் பிரச்சினை, பேசித்தான் இதனைத் தீர்க்க முடியுமே தவிர யுத்தத்தினால் முடியாது'' - என்றார்கள். ஆனாலும், இன்றைய ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் என்ன கூறுகின்றார்கள்? ''இது ஓர் பயங்கரவாதப் பிரச்சினை, இதனை இராணுவ ரீதியில் தான் வெற்றி கொள்ள வேண்டும்'' - என்று கூறுகின்றார்கள்.

அவர்களது கருத்துப்படி முன்னைய ஜனாதிபதிகளும், தளபதிகளும் முட்டாள்கள், தாம் மாத்திரம்தான் புத்திசாலிகள் என்ற தோரணையில்தான் இவர்களது செயற்பாடுகள் இருக்கின்றன. இவர்களது புத்திசாலித்தனத்தின் உச்சகட்டம்தான் கொழும்பில் இருந்து தமிழர்களை விரட்டிய செயலாகும்.

இதுமட்டுமல்ல, யார் ஒருவர் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை அல்லது யுத்த நடவடிக்கைகளை கண்டிக்கின்றார்களோ அவர் ஐ.நா. சபை அதிகாரியாக இருந்தால் என்ன, வேற்று நாட்டுத் தூதுவராக இருந்தால் என்ன அவர்கள் எல்லோரும் புலிகளது முகவர்களாகவும் தேசத் துரோகிகளாகவும் உங்களால் கருதப்படுகின்றனர்.

### எங்களுடைய அணுகுமுறை விளங்காவிடில் அழிவுக்கு நீங்களே பாத்திரவாளிகளாவீர்கள்!

இலங்கையின் 30 வருடகால யுத்த வரலாற்றை கற்றுக்கொண்டாலே இராணுவத் தீர்வு சாத்தியமா இல்லையா என்பது புலப்பட்டுவிடும். ஆனால், கோடிக்கணக்கில் கமிஷன் புரளும்போது, வரலாற்றை யார் பார்க்கப்போகின்றார்கள். இந்த அரசு கலைக்கப்பட்டாலோ, பதவி இழந்தாலோ இப்பொழுது யுத்த முழுக்கமிடும் அமெரிக்கப் பிரஜையான பாதுகாப்புச் செயலாளரும், ஆலோசகரும் அமெரிக்கா சென்றுவிடுவார்கள்.

ஆனால், இந்த நாட்டில் வாழப்போகும் மக்கள், மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுவார்கள். சோமாலியாவிலும் விட மோசமான நிலை இங்கு ஏற்படும். எனவே, நாட்டுப்பற்றாளர்கள் என்று கூறிக்கொள்ளும் உங்கள் அனைவரிடமும் கேட்கின்றோம், யுத்தத்தை நிறுத்திப் பேச்சுக்கு முயற்சி செய்யுங்கள். அற்பத்தனமான சொகுசுகளையும் குறுகிய அரசியல் லாபங்களையும் விடுத்து, நேர்மையாக பிரச்சினைகளைத் தீர்க்க முன்வாருங்கள். இது கெஞ்சுதல் அல்ல; மனிதாபிமான கோரிக்கை.

எங்களது மனிதாபிமானக் கோரிக்கையும், ஜனநாயக முறையிலான அணுகுமுறைகளும் உங்களுக்கு விளங்காவிடில், ஏற்படக்கூடிய எவ்விதமான அழிவுகளுக்கும் நீங்களே பாத்திரவாளியாவீர்கள். இனியாவது சிந்தித்துச்செயற்படுங்கள் - என்றார்.



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைச் சமூகம் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வத்தின் சேவையைப் பாராட்டி நடத்திய விழாவிலே விழாநாயகனுக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் பொன்னாடை போர்த்திய பின் பிரதி அதிபர் திருமதி ஐ.ஸ்ரீரங்கன் சேவைக்கான உயர் விருதை வழங்கிக் கௌரவிப்பதையும் சிரேஷ்ட மாணவத் தலைவி எஸ்.பாகினி பாராட்டுரை வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக புதிய வேட்பு மனுக்களை கோர ஏற்பாடு

## சட்டத்தில் திருத்தம் வருகிறது

கொழும்பு, செப். 22

வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களுக்காக புதிய வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய இடமளிக்கும் வகையில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் சட்டம் திருத்தப்படவுள்ளது.

- இவ்வாறு அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

விசேட ஏற்பாடுகள் ஊடாக சட்டத்தைத் திருத்துவது தொடர்பான யோசனையை அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அமைச்சரவையில் சமர்ப்பித்தார். அதை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

வடமாகாணத்தில் ஒரு மாநகரசபை, ஐந்து நகர சபைகள், 2 பிரதேச சபைகள் ஆகியவற்றிற்கான உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனு கோரப்பட்டு பின் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்காகக் கோரப்பட்ட வேட்பு மனுக்களை ரத்துச் செய்வதற்கு புதிய திருத்தங்கள் இடமளிக்கும்.

அத்துடன் வேட்பு மனுக்களை புதிதாகக் கோரி தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளுக்கும் வழிவகுக்கும் என்று அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா மேலும் தெரிவித்தார். (சி)

# மூதூரில் கிராம சேவையாளர் வீட்டில் வைத்துச் சுட்டுக்கொலை

திருகோணமலை,செப்.22

மூதூர் பலத்தடிச்சேனையில் கிராமசேவையாளர் ஒருவர் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த கவிஞர் முத்துக்குமார் பரஞ்சோதி (வயது - 52) என்ற கிராம சேவையாளரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இரவு 9.20 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற அடையாளம் தெரியாத ஆயுததாரிகள், அவரைச் சுட்டுக்கொலை செய்துவிட்டுத் தப்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையில் மதச் சுதந்திரம் மறுப்பு என்கிறது அமெரிக்கா

இலங்கையில் பௌத்தமதத்தினர் தவிர்ந்த இதர மக்களினது மதச் சுதந்திரம் மறுக்கப்படுவதாக இலங்கை அரசு மீது அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.


அமெரிக்க காங்கிரஸில் அனைத்துலக மதச் சுதந்திரம் தொடர்பிலான 9 ஆவது ஆண்டறிக்கையைக் கடந்தவாரம் அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் கொண்டலிஸா றைஸ் தாக்கல் செய்தார். அதிலேயே இலங்கை தொடர்பாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

சர்ச்சைக்குரிய மத மாற்றத் தடைச் சட்டத்தை 2004ஆம் ஆண்டு இலங்கை அரசு அறிமு[illegible] விளைவாக மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்க அந்நாடு தவறிவிட்டது.

கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்படுதல் மற்றும் மத மாற்றத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் அமெரிக்கத் தூதரகத்தின் பிரதிநிதிகள் இலங்கை அரசின் பிரதிநிதிகளைச் சந்தித்து அமெரிக்காவின் கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்...நிகழ்வுகள்...



சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தின் பொன் விழாவை முன்னிட்டு ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நிறுவுனரான பெல்ஜியம் நாட்டை சேர்ந்த வண.பிதா லூயில் டெய்சி அடிகளாரின் உருவச்சிலை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. யாழ். மறைமாவட்டகுரு முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் இதனை திரைநீக்கம் செய்துவைத்தார்

*(படம்: வலி.தென்மேற்கு செய்தியாளர்)*



இடம்பெயர்ந்து நல்லூர் கிராம அலுவலர் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனம் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது. அப்பொருள்களை நல்லூர் பிரதேச உதவித் திட்டப் பணிப்பாளர் இ.இரவீந்திரசர்மா பயனாளி ஒருவருக்கு வழங்குவதையும் நிறுவனத்தின் இணைப்பாளர் பாலகிருஷ்ணன், கிராம அலுவலர் இ.சந்திரகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம் : லக்ஸ்மன்)*



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ் கிளையில் வியாபார நிறுவனங்களுக்கான ''பிஸ்னஸ் கிளப்'' காப்புறுதியைப் பெற்றிருந்த வாடிக்கையாளர்களுக்கான அதிர்ஷ்ட சீட்டிழுப்பை அண்மையில் நடத்தியது. இதில் வெற்றிபெற்ற வாடிக்கையாளருக்கான பரிசை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பிரதேச செயலகத்தின் பிரதம கணக்காளர் வே.வேல்நிதி வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக உத்தியோ கத்தர் அ.சுபேசன், விற்பனை முகாமையாளர் பா.சத்தியன், பிராந்திய முகாமையாளர் திருமதி ஆர். எவ். அரியநாயகம், அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.செந்தூரன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



அண்மையில் நடைபெற்ற திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் புதிய ஆண்டிற்கான பதவியேற்பு வைபவத்தின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா அவர்களும் பாரியாரும் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம். அருகில் ஸ்தாபகத் தலைவர் லயன் கலாநிதி க.குணராசாவும் காணப்படுகின்றார்.



ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் தொலைபேசிச் சேவை, நிழற்பிரதியாக்கச் சேவை என்பன அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. சமாசத்தின் தலைவர் எஸ்.யூட் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். சமாசத்தின் பொருளாளர் பி.மனோகரன், கணக்காளர் எஸ்.கிருபாகரன், கிராம அலுவலர் ஜே.பத்திநாதன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.சிவராஜா, பதவி நிலை உதவியாளர் கே.ஜெகபாலன், உதவி அரச அதிபர் கே.சிறிமோகன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# நவராத்திரி விரதத்தை 12.10.2007இல் ஆரம்பிப்பதுவே சரியான முறையாகும்

## ஆகமப் பிரமாணமுறை அதற்கு வழிகாட்டுகிறது

**இம்முறை நவராத்திரி விரதம் எப்போது ஆரம்பம் என்ற சர்ச்சை ஏற்கனவே தொடங்கியுள்ளது.**

**12.10.2007 வெள்ளிக்கிழமை நவராத்திரி விரதாரம்பம் என்கின்றன திருக்கணித பஞ்சாங்கமும் அதனடிப்படையில் கணிக்கப்பட்ட கலண்டர்களும்.**

**ஆனால்,11.10.2007 வியாழனன்று நவராத்திரி ஆரம்பம் என்கின்றன வாக்கிய பஞ்சாங்கமும் அதனடிப்படையில் கணிக்கப்பட்ட கலண்டர்களும்.**

**ஆனால், இரண்டுமே 21.10.2007 அன்று மஹா நவமி என்றும் அடுத்த நாள் 22ஆம் திகதி விஜயதசமி என்றும் குறிப்பிடுகின்றன.**

**அஃதாவது, திருக்கணிதக் கணிப்பின்படி 9ஆம் நாள் மஹா நவமியும், வாக்கியக் கணிப்பின்படி 10ஆம் நாள் மஹா நவமியும் வருவதால், இரண்டு முறையிலும் மஹா நவமியும், விஜயதசமியும் மாறாமல் வருகின்றன.**

**எனவே, நவராத்திரி விரத ஆரம்பமாக எந்தத் தினத்தைக் கொள்வது?**

**அது பற்றிய சிந்தனையைத் தூண்டும் ஓர் ஆய்வை முன்வைக்கிறார் இக்கட்டுரையாளர்.**

சிவனுக்குகந்தது சிவராத்திரி! அவன் தேவிக்குகந்தது நவராத்திரி! சிவனை வழிபட ஒரு சிவராத்திரி. உமையை வழிபட ஒன்பது (நவ) சக்தி ராத்திரி.

சக்தியை நாயகியாகப்போற்றும் நவராத்திரி விழாவானது ஒரு கலாசார விழுமியங்களைப் பேணுகின்ற, சக்தியின் மகிமையைப் போற்றுகின்ற, கல்வி, வீரம், செல்வம், கலை, தொழில் என்பவற்றில் இறையுணர்வைப் பிரதிபலிக்கின்ற ஒரு விழாவாகும். இதனால்தான் சிவராத்திரிக்கு இல்லாத முக்கியத்துவமும் பிரபல்யமும் சக்தி விழாவாகிய நவராத்திரிக்கு உண்டு.

இவ்விழாவானது ஆலயங்களில் சமய வைபவமாக மட்டுமல்லாமல் இல்லங்கள், பொதுமன்றங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், கலாநிலையங்கள், வேலைத் தளங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் சரஸ்வதி பூஜை என்றும் கலைவிழாவென்றும் காலங்காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சிறப்புப்பெற்ற இவ்விழாவானது இவ்வருடம் எப்போது ஆரம்பமாகிறது என்பதில் குழப்பம் நிலவுகிறது.

அதாவது திருக்கணித பஞ்சாங்கப் பிரகாரம் இவ்வருட நவராத்திரி விரதாரம்பம் 12.10.2007 வெள்ளிக்கிழமை என்றும் அதன்படி 9ஆம் நாளாகிய 21.10.2007 அன்று மஹா நவமி என்றும் 10ஆம் நாளாகிய மறுநாள் விஜயதசமி என்றும் காணப்படுகிறது.

வாக்கிய பஞ்சாங்கமும் அதன் கணிப்பில் வெளிவரும் கலண்டர்களும் 11.10.2007 வியாழக்கிழமை நவராத்திரி ஆரம்பம் என்றும் 10ஆம் நாள் (21.10.2007) மஹாநவமி என்றும் 11ஆம் நாள் விஜயதசமி என்றும் குறித்திருக்கின்றன.

வழக்கம்போலவே பஞ்சாங்க மாறுபாடு இதற்குக் காரணம் என்று வெறுமனே இதனைத் தட்டிக்கழித்துவிட முடியாது.

ஏனெனில், ஒரு பஞ்சாங்கம் அதன் கணிப்பு நியதியில் நின்று வழுவாமல் ஆகம நியமப்பிரகாரம் விரத நிர்ணயங்களைக் குறிப்பிட்டிருந்தால் அதனை மற்றையவர்கள் இரு பஞ்சாங்கங்களுக்குமிடையிலான வேறுபாடு என்று எடுத்துக்கொள்வர். ஆனால், வாக்கியப் பஞ்சாங்கப் பிரகாரம் அவர்களது கணிப்பின் பிரகாரப்படியே ஆகம நியமத்துக்கு முரணான வகையில் விரத நிர்ணயம் செய்துள்ளமையைக் காணமுடிகிறது.

இனி நவராத்திரி விரதநிர்ணயம் சம்பந்தமான விடயங்களைக் காண்போம்.

பூர்வபக்க பிரதமை முதல் அமாவாசை முடியவுள்ள சித்திரை முதல் பங்குனி வரை உள்ள காலம் சாந்திரமாதம் எனப்படும். அதாவது சந்திரனைக்கொண்டு கணக்கிடப்படும் காலம் என்று பொருள்படும்.

இவ்வாறான சாந்திரமாத முறையில் அமைந்த ஆஸ்விஜ மாத அதாவது ஐப்பசி மாதத்து சுத்தப் பிரதமையில் தொடங்கி நவமி முடியும் வரையுள்ளதான காலத்தில் நவராத்திரி விரதத்தை சுத்த பிரதமையில் ஆரம்பிக்க வேண்டும் என்று பின்வரும் காரணாகம ஸ்லோகம் கூறுகின்றது.

''ஆஸ்வயுக் சுக்லபக்ஸேது ப்ரதிபந் நவம்யந்தகே

ப்ரதிபத்தின மாரப்ய விரதோத்ஸவ மதாசரேத்''

இதன் பிரகாரம் அமாவாசை சேராத பிரதமையில் நவராத்திரி விரதம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது தெளிவாகின்றது.

''வர்ஜநீயா ப்ரயத்னேன அமாயுக்தா து பார்த்திவ

த்வீதீயாதி குணைர்யுக்தா பிரதிபத் சர்வகாமதா''

இதன்படி எம்முயற்சி எடுத்தாவது அமாவாசையுடன் சேர்ந்த பிரதமையை நீக்க வேண்டும். அத்துடன் துவிதீயையுடன் கூடிய பிரதமை எல்லா விருப்பங்களையும் கொடுக்கக்கூடியதாகும் என்று ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

மேலும் -

''யதிகுர்யாத் அமாயுக்தாம் பிரதிபத் ஸ்தாபனே மம

தஸ்ய சாபாயுதம் தத்வா பஸ்ம சேஸம் கரோம்யஹம்''

அதாவது அமாவாசை சேர்ந்த பிரதமையில் எவனொருவனக்கு நவராத்திரி பூஜை ஆரம்பிக்கின்றானோ அவனுக்கு சாபம் கொடுத்து அவனைச் சாம்பலாகச் செய்வேன் என்று தேவி புராணத்தில் தேவியே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

மேலும் தேவிபுராணத்தில்,

''அமாயுக்தா ஸதா சைவ பிரதிபந் நிந்திதா மதா

தத்சேத் ஸதாபயேத் கும்பம் துர்பிக்சம் ஜாயதே த்ருவம்''

அமாவாசையுடன் சேர்ந்த பிரதமையில் கும்பஸ்தாபனம் செய்வதால் நிச்சயமாக நாட்டில் வறுமையுண்டாகும். அமாவாசையுடன் சேர்ந்த பிரதமை எப்போதும் விலக்கப்பட வேண்டியதே என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

''அமாயுக்தா நகர்த்தவ்யா ப்ரதிபத் பூஜனே மம

முகூர்த்த மாத்திரா கர்த்தவ்யாத்விதீயாதி குணான்விதா''

அதாவது, அமாவாசையுடன் சேர்ந்த பிரதமை திதியன்று எனக்கு நவராத்திரி பூஜை செய்யக்கூடாது. இப்பிரதமையானது துவிதீயையுடன் சிறிது நேரமாவது சேர்ந்திருந்தால் அத்தினத்தில் பூஜை செய்வது சிறந்தது என்பதாகும். இதிலிருந்து அமாவாசையுடன் கூடிய பிரதமையில் ஆரம்பம் கொள்வது தவறென்பதுடன் துவிதீயையுடன் கூடிய பிரதமை சிறப்புடையது என்பதும் தெரிகின்றது.

திருக்கணிதப் பஞ்சாங்கப்படி 11.10.2007 வியாழன் பகல் 10.31 வரை அமாவாசை உள்ளது. ஆனால், 12.10.2007 பகல் 12.55 வரை பிரதமை நிற்பதால் நவராத்திரி ஆரம்பம் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், வாக்கிய பஞ்சாங்கப்படி 11.10.2007 வியாழக்கிழமை பகல் 10.15 வரை அமாவாசை உள்ளதால் அன்று நவராத்திரி ஆரம்பம் கொள்வது ஆகமத்திற்கு முரணானது. இவர்களது பஞ்சாங்கப்பிரகாரம் 12.10.2007 வெள்ளிக்கிழமை பகல் 12.09 வரை பிரதமை உள்ளதால் அன்று சுத்தப் பிரதமையில் நவராத்திரி ஆரம்பம் கொள்ள முடியும்.

தவிரவும் அதன்படி ஒன்பதாம் நாள் மஹாநவமியும் அமையும். ஆனால் கவனயீனமாகவோ அன்றி அலட்சியமாகவோ விடப்பட்டுள்ள இத்தவறை நியாயப்படுத்த முயலாது மக்களைக் குழப்பத்தினின்றும் விடுவித்து சரியான நாளில் நவராத்திரி ஆரம்பத்தைக் கைக்கொள்ள உரியவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று உலகமெங்கும் வாழும் இந்துகள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் தென்னிந்தியாவில் இருந்து வெளிவரும் திருக்கணித, வாக்கிய முறைகளிரண்டிலும் அமைந்த எல்லாப் பஞ்சாங்கங்களும் நவராத்திரி ஆரம்பம் 12.10.2007 வெள்ளிக்கிழமையென்றே குறிப்பிட்டுள்ளன. அங்குள்ள ஆலயங்களும் நவராத்திரி கும்பம் 12.10.2007 அன்றே வைக்க இருப்பதாக அறிவித்துள்ளன.

கொழும்பிலுள்ள மயூரபதி அம்மன் ஆலயம் 12.10.2007 அன்றே நவராத்திரி ஆரம்பம் என வெளிப்படுத்தியுள்ளது. ஏனைய ஆலயங்களும் இதனையே பின்பற்றி சாஸ்திரோத்தமான முறையில் நவராத்திரி விழாவைச் செய்யவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

கடந்த 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற விளக்கீடு, திருவெம்பாவை என்பனவற்றில் இப்படியொரு முரண்பாடு ஏற்பட்டவேளை இந்துகலாசார அமைச்சு பலவாறு ஆராய்ந்து இந்திய அண்ணாமலை கோயில் பிரகாரம் சரியான திகதியை அறிவித்தபோது அது திருக்கணித பஞ்சாங்கப்படி அமைந்த திகதியாக அமைந்ததும் அதுவே சரியான கணிப்புமுறையை வெளியிட்டு வருகின்றதென்ற வரவேற்பும் இருந்தமையை இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தம்.

எனவே, ஆகமப்பிரமாண முறையில் 12.10.2007 அன்று வெள்ளிக்கிழமை நவராத்திரி விரதத்தை ஆரம்பிக்குமாறு இந்துப் பெருமக்களைக் கேட்டுக்கொள்வது மட்டுமன்றி, தமது தவறுக்கு நியாயம் கற்பிப்பதை விடுத்து தவறை மனிதநேயத்தோடு தவறென ஏற்றுக்கொண்டு மக்களை நல்வழிப்படுத்த வேண்டுமாறு வாக்கியப் பஞ்சாங்க கர்த்தாக்களை மிக விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

சி.ஜெகதீஸ்வரசர்மா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சாவகச்சேரி செருக்கற்பதி

# அருள்மிகு ஸ்ரீசித்திவிநாயகர் திருக்கோயில்

## உதய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் புரட்டாதி மாதம் 7ஆம் திகதி (23.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை வரும் சுபவேளையில் விநாயகப் பெருமான் திருவருள் துணை கொண்டு சிற்பாசிரியர் **சின்னத்துரை நந்தகுமார்** அவர்களால் சிற்பச் சாத்திரப்படி நிர்மாணிக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நிகழ திருவருள் கொண்டுள்ளது.

*அடியார்கள் அனைவரும் வருகை தந்து விநாயகப் பெருமானின் அருளைப் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**அமரர் பஞ்சலிங்கம் சரஸ்வதி குடும்பம்.**

*சாவகச்சேரி.* (சி/53766)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### பாலகுகப்பிரசாத ஆராத்யர்



கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடாந்தம் நடத்தப்படும் அரசு ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் சிறுவர் கதையாக்கத்தில் 21.09.2007 வெள்ளிக்கிழமை விருது பெற்ற **பாலகுகப் பிரசாத ஆராத்யர்** அவர்களை மேன்மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**சிவஸ்ரீ சாயிஜீவானந்தக் குருக்கள் குடும்பம்**
*(ஆஸ்திரேலியா),*
**கலாநிதி கலாவதி பிரகதீஸ்வர சர்மா,**
**சிவஸ்ரீ சிவகுமாரக்குருக்கள் குடும்பம்**
*கல்வியங்காடு.*

(66060)



## யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2007

*இடம்:-* **பாடசாலை மண்டபம்**
*காலம்:-* **26.09.2007 புதன்கிழமை**
*நேரம்:-* **முற்பகல் 10 மணி**

குறிப்பு: மேற்படி பாடசாலையில் 2000ஆம் ஆண்டும், அதற்கு முன்னரும் தரம் - 5 இல் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது சமூகந்தரவும்.

(66052)

**செயலாளர்,**
பழைய மாணவர் சங்கம், யா/யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.


## கசிப்பு விற்பனை செய்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,செப்.22

சட்டவிரோதமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதத்தை சாவகச்சேரி நீதிமன்று விதித்துள்ளது.

சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டதாக மதுவரித் திணைக்களத்தினர் மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த தகப்பன்,மகன் ஆகியோருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தவழக்கினை விசாரித்த நீதிவான் இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

(202-207)


# UNIVERSITY OF JAFFNA, SRILANKA

## POST OF COMPUTER APPLICATIONS ASSISTANT (ON CONTRACT BASIS)

Applications are called for the above- mentioned position in the Faculty of Graduate Studies and the External Examinations Unit of the University of Jaffna.

**Job: Computer Applications Assistant (On contract basis)**

**Reports to :** (1) Dean Faculty of Graduate Studies/ Registrar/ Vice-Chancellor-Those who are appointed to the Faculty of Graduate Studies.
(2) Coordinator, External Examinations Unit/ Registrar/ Vice-Chancellor-Those who are appointed to the External Examinations Unit.

**Immediate Supervision :**
(1) Dean, Faculty of Graduate Studies
(2) Coordinator, External Examinations Unit.

**Location :** (1) Faculty of Graduate Studies
(2) External Examinations Unit.

**Primary Responsibilities:** Computer applications related works assigned by the Dean/ Coordinator and the respective Assistant Registrar.

**Qualifations:**

i. G.C.E. (Ordinary Level) Examination in six subjects including English and Mathematics.
ii. a) Two years experience in the use of Computer Application packages.
b) Suitable qualifications in Computer Applications and at least 06 months on the job training, preferably in the University system.

### GENERAL CONDITIONS

The assignment is on a full time assignment basis and initially for a period of one year from the date of commencement of the assignment. However, the assignment is renewable provided the services rendered and performance of work during the tenure of assignment is satisfactory.

Remuneration for this assingment is Rs 15,870/= (fixed) per month (all inclusive). The appointee will become a contributor to the Employees Provident Fund at 8% from his/ her earnings and the university will contribute from the earnings of the Faculty of Graduate Studies/ External Examination Unit a sum equivalent to 12%. In addition the University/Faculty of Graduate Studies/ External Examination Unit will make a further contribution equivalent to 3% of his/her monthly remuneration to the Employees Trust Fund.

Those interested are requested to submit self prepared applications together with a curriculum vitae and the names of two non - related referees with their contact detail including e-mail address and telephone numbers.

**Closing date for applications: 12.10.2007**

**Registrar**
**19.09.2007**

(C/53764)



## தவறிவிட்டது

சந்தை வீதி, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த குமாரவேலு பத்மநாதன் என்பவரது தேசிய அ.அட்டை (47151246V), சாரதி அனுமதிப்பத்திரம் (DL373554), மோட்டார் சைக்கிள் வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் (500-1150) என்பன 19.09.2007 அன்று மானிப்பாய்க்கும் மருதனார்மடம் சந்தைக்கும் இடையில் தவிறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுந்தர்சன், மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.சன்மானம் வழங்கப்படும்.



## சேவைகள்

மலேசியாவில் Study, work permit, Visit Visa சகல நாடுகளுக்கும் Visa ஆலோசனைகள், நியாயமான கட்டணத்தில் Air Tickets, Embassy, Passport Form பூர்த்திசெய்ய, இந்திய சுற்றுலா ஒழுங்குகள். ஆலோசனைக் கட்டணம் 500/- மட்டுமே.

A.RAVIKUMAR 077 3554552



# COMPUTER COURSES

New Batches Start on
Batch 1 : 14.09.2007
Batch 2 : 15.09.2007
Batch 3 : 23.09.2007
Batch 4 : 24.09.2007
at 10.00 A.M



உங்கள் முயற்சிக்கு....



இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



| Course | Fee |
|---|---|
| Diploma in Microsoft Office | 2000/- |
| Diploma in Desk Top Publishing | 3000/- |
| Diploma in Internet Technology | 3000/- |
| Diploma in Hardware Technology | 4000/- |
| Diploma in Computer Programming | 6000/- |
| Diploma in Eng. Drawing & AutoCAD | 5000/- |
| Diploma in Computerized Accounting | 4000/- |

Adobe PageMaker
Adobe Premiere
Adobe Photoshop
Corel DRAW
Macromedia Flash
VB . NET
Java
C/ C++

இக்கட்டணச் சலுகை இப்பிரிவுக்கு மட்டுமே !

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

**INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )**
**# 100. Clock Tower Road, Jaffna**
T.P No: 021-222 2831 Fax: 021 222 6933 Email: iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விற்பனையாகிறது

* 2007 முதல் புதிய பாடத்திட்டத்திற்கமைவான தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் -10 பாடமும் பயிற்சியும்
ஆக்கம்: திருமதி மனோ ஜெயராசா
* சுகாதாரமும் உடற்கல்வியும்
க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை வினாக்களும் விடைகளும் 2001 - 2006 வரை
ஆக்கம்: திருமதி ஜா.தர்மஜீவன் B.A., Dip.in Edu.

வெளியீடு:
**ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,**
*235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.*
T.P.: 9481 (சி/53767)



## கிருஷ்ணா திருமண சேவை

**T.சுப்பையா**
*செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.*
T.P.: 021 222 9032

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்.
1976 - சிவில் எஞ்சினியர்
1974 - M.B.B.S. Doctor
1966 - B.A. பட்டதாரி
1970 - றெயினிங் மாஸ்ரர்
1973 - B.A.மாஸ்ரர்
இவர்களுக்கு பெண்கள் தேவை.

(66061)



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA *புறொயிலர் குஞ்சுகள் 24.09.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.*

* றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
* தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை
* றாஜ் ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, நெல்லியடி
* திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி
* மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

T.P.: 222 3529, 222 2867

(66063)




யாழ்ப்பாணம், செப்.22

இன்று சனிக்கிழமை புரட்டாதி சனி வாரம் ஆரம்பமாகின்றது.

இதனையொட்டி ஆலயங்களில் சனிபக வானுக்கு விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன.

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் புரட்டாசி சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் நவக்கிரகங்களுக்கு விசேட அபிசேசம், பூசைகள் இடம்பெறவுள்ளன. (203)

* * *

கோப்பாய், செப்.22

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203-72-224)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,செப்22

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் மீசாலைப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை நாளை ஞாயிற்றுக்கிழமை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

கண், பல், இரத்த அமுக்கம், தோல், நீரிழிவு, பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மீசாலை, வேம்பிராய், இராமாவில், அல்லாரை ஆகிய பகுதி மக்கள் பரிசோதனை முகாமில் கலந்துகொள்ளலாமென கழகச் செயலாளர் லயன் கா.இராசதுரை அறிவித்துள்ளார்.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தடப்படவிருந்த இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் நிறுத்தப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார். (203-207)

# கிருமிநாசனி தெளிக்கப்பட்ட திராட்சைப் பழங்கள் விற்பனையில்?

வலி.தென்மேற்கு,செப்.22

யாழ்.மத்திய பஸ்நிலைய சுற்றாடலிலும் நகரப் பகுதியின் வீதியோரங்களிலும் திராட்சைப் பழங்கள் கிருமிநாசனி தெளிக்கப்பட்ட நிலையில் விற்பனை செய்யப்படுகின்றன என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.


தற்போது குடாநாட்டில் மூலைக்கு மூலை திராட்சைப் பழங்கள் விற்பனை செய்யும் பெட்டிக் கடைகள் முளைத்துள்ளன. அவற்றைவிட சிறு வியாபார நிலையங்களிலும் திராட்சைப் பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தத் திராட்சைப் பழங்களில் கிருமிநாசனி தெளித்த அடையாளங்கள் திட்டுத் திட்டாகக் காணப்படுகின்றன என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

திராட்சையை விரைவில் பழுக்க வைப்பதற்கென வேறு சில இரசாயன மருந்துகளும் தெளிக்கப்பட்டிருக்கலாம் எனவும் - இவற்றை உண்பதால் உடல் நலத்திற்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-135)

# குடாக் கடலில் கடந்த சில தினங்களாக விளையாட்டு உபகரணங்கள் ஒதுங்குகின்றன!



யாழ்ப்பாணம்,செப்.22

குடாக்கடலில் கடந்த சில தினங்களாகச் சில பொருள்கள் ஒதுங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களே அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றை எடுப்பதில் பொது மக்களும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக குடாக் கடலில் சிறிய குப்பிகள் மிதந்து வந்துள்ளன. இவற்றைக் கண்ட மீனவர்கள் வெடி பொருள்களாக இருக்கும் என்ற அச்சம் காரணமாக அவற்றை எடுக்கவில்லை.

எனினும் சிலர் அதனை எடுத்து ஆராய்ந்தபோது அவை சிறுவர்களுக்குரிய விளையாட்டு உபகரணங்களைக் கொண்ட குப்பியாக - உருவங்களைப் பொருத்தி விளையாடும் உபகரணம் - காணப்பட்டது.

இதையடுத்து அவற்றை எடுப்பதில் மீனவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த விளையாட்டு உபகரணங்களுடன் சில பொதிகள், பரல்கள் என்பனவும் காணப்பட்டன என்றும் - அச்சம் காரணமாக அவற்றை எடுப்பதைத் தவிர்த்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

தீவகப் பகுதியிலும் இவ்வாறான பொருள்கள் கரையொதுங்குவதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அனலைதீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய பிரதேச கடற்கரைகளில் இப்பொருள்கள் கரையொதுங்குவதாகவும் இவற்றை எடுப்பதில் பிரதேச மக்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (202-111-207)

## செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், செப்.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் தரம் 11 வகுப்புகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும், நாளையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203-207)

* * *

யாழ்ப்பாணம், செப்.22

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் ஐந்து பாடசாலைகளின் அதிபர்கள், தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோருக்கான பிள்ளைநேயப் பாடசாலை தொடர்பான செயலமர்வு இன்றும் நாளையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் ஆகியவற்றின் அதிபர், ஆசிரியர்களுக்கே செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவன அனுசரணையுடன் செயலமர்வு நடாத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (202)

## புற்றுநோயாளருக்கு சத்துணவுப் பொதிகள்

உடுப்பிட்டி,செப்22

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இல்வச சிகிச்சை பெற்றுவரும் புற்றுநோயாளர்களுக்குஒரு தொகுதி சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி லயன் கழகத்தினரும் வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா நிர்வாகத்தினரும் இணைந்து புற்றுநோயாளர்களுக்கான சத்துணவுப் பொதிகளை நேற்றுக் காலை 8.45 மணியளவில் வழங்கியுள்ளனர்.

வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் எஸ்.கமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வல்லிபுர நிர்வாகத் தலைவர் எஸ்.அன்னலிங்கம், வைத்திய அதிகாரி எஸ்.ஜெயக்குமார், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (203-155)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.22

சரவணை நாகபூசணி அம்மன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5மணி வரை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளில் பதிவுகளை மேற்கொண்ட கழகங்களுக்கு இடையில் ஏழு பேர் கொண்ட விலகல் முறையில் போட்டிகள் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம், செப்.22

'குரும்பசிட்டியின் அழிவும் ஆக்கமும்' நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் வயாவிளான் ம.ம.வியில் இடம்பெறவுள்ளது.

முன்னாள் அதிபர் ஆ.சி.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற ஆசிரியர் சி.இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் அமரர் பொன். பரமானந்தர், அமரர் ஈழகேசரி நா.பொன்னையா ஆகியோரின் திருவுருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டு அஞ்சலி உரைகளும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து குரும்பசிட்டி கிராமத்தில் உள்ள சொந்தக் காணிகளைப் பதிவு செய்தலும் பதிவுப்பத்திரங்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம், செப்.22

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும் பிற்பகல் ஒரு மணிக்கு புனித பொஸ்கோ ம.வியிலும் 'கூடி விளையாடு பாப்பா' சிறுவர் நாடக நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

தொடர்நிகழ்வாக 28ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நாவாந்துறை றோ.க.த.க. பாட சாலையிலும் அன்று பிற்பகல் ஒரு மணிக்கு புனித சாள்ஸ் ம.வி.யிலும் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம், செப்.22

உடுவில் மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கணணிக்கருத்தரங்கு ஒன்று ஐ.டி.எம். நிறுவனத்தினரால் நடத்தப்படவுள்ளது.

பயிற்சி நெறிகள் அடுத்தமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதில் உயர்தரப்பரீட்சை எடுத்த மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (203)

* * *

குடத்தனை, செப்.22

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'அவதாரம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவை சமுர்த்தி உத்தியோகத்தர் பா.மணிக்குமார் நிகழ்த்தவுள்ளார். (202-78)

* * *

யாழ்ப்பாணம், செப்.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட சமூகக் கல்வி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் இன்று காலை 9மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் இ.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (203-207)

* * *

வலி.வடக்கு, செப்.22

இணுவில் இந்துக்கல்லூரியின் 143ஆவது வருட நிறைவு கொண்டாட்டமும் 'சைவப் பிரகாசம்' மலர் வெளியீட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி அதிபர் வி.சச்சிதானந்தன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் [illegible] திருமுருகன் நிகழ்த்தவுள்ளார். (203-86)




# விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப்.22

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் மாவட்ட மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடிவினாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கிக் கௌரவித்தார்.

வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**ஆங்கில மொழிமூலம்**

தரம் 9 : ந.மாதங்கி (வேம்படி மகளிர் கல்லூரி), ம.கர்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி), பா.நிமினி(சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), பா.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி)

தரம் 10: ஆ.சஞ்சேயன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), சி.கோபிநாத் (யாழ்.இந்துக் கல்லூரி), ஈ.இரஜனி(விக்னேஸ்வராக் கல்லூரி), ம.துளசி (யாழ்ப்பாணக் கல்லூரி).

**தமிழ்மொழி மூலம்**

தரம் 9: இ.சாம்பவி (இராமநாதன் கல்லூரி), து.தனுசன் (வேலணை மத்திய கல்லூரி), சொ.தருமதன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), அ.கிரிஷாந் (மீசாலை வீரசிங்கம் ம.வி),

தரம் 10: த.துவாரகன் (விக்னேஸ்வராக் கல்லூரி), ந.சன்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி), சி.நிசாந்தினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.கமலவாசன் (கம்பர்மலை வித்தியாலயம்),

தரம் 11: ச.விதுசன் (ஹாட்லிக் கல்லூரி), த.பிரதீபா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), ச.சபேசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.கபித்தனா (யூனியன் கல்லூரி). (202)

# குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை

குடும்பநலசேவை உத்தியோகத்தர்கள் தரம்2 'ஆ' பிரிவினருக்கான வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. பரீட்சை நடைபெறும் தினங்களும் பிரிவுகளும் வருமாறு

24.09.2007 - சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

25.09.2007 - கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபிரிவு - கோண்டாவில் மத்திய மருந்தகத்தில் பரீட்சை நடைபெறும்

27.09.2007 - பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

28.09.2007 - ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

29.09.2007 - தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

01.10.2007 - மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

02.10.2007 - யாழ். போதனா வைத்தியசாலையில் சேவைபுரியும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு கோண்டாவில் மத்திய மருந்தகத்தில் செய்முறைப் பரீட்சை.

04.10.2007 - சுட்டெண் 1-39 வரையான மாணவர்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வாய்மொழிப் பரீட்சை.

05.10.2007 - சுட்டெண் 40-79 வரையானவர்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வாய் மொழிப்பரீட்சை. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

ஏகாதசித் தீர்த்தம்
நாகேஸ்வரம் - அளவெட்டி

நாளை 23.09.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 9 மணியளவில் நி.பாஸ்கரன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) மாணவன் அவர்களின் சொற்பொழிவும் முற்பகல் 10 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், தொடர்ந்து தீர்த்தம் இடம் பெறும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நாகேஸ்வரம் - அளவெட்டி. பொ.ப.சபை





## வேலணை வடக்கு இலந்தை வனப்பதி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ தேர்த்திருவிழா - 2007

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் 14.09.2007 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறுகின்றன. இந்த உற்சவத்தில் நாளை (23.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் 24ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. இரதோற்சவத்தில் இந்த வருடம் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சமுக விநாயக பெருமான் எழுந்தருளி இரதத்தில் பவனி வர இருக்கிறார் என்பதை அடியார்களுக்கு அறியத்தருவதுடன் உற்சவம் நிறைவடைந்த பின்னர் அன்னதான நிகழ்வும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்த்திருவிழா உபயகாரர்கள்.



## Rainbow Travels & Tours

தீபாவளியை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகளில் பொதிகள் சேவை

கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு தேவையான உணவு, உடைகள், பிளாஸ்டிக் பொருள்கள், மின்சார உபகரணங்கள், இரும்பு, அலங்காரப் பொருள்கள் என்பனவும் மற்றும் சகல விதமான வியாபாரப் பொருள்களும் எல்லா விதமான அனுமதியும் பெற்று கொழும்பிலிருந்து பெற்றுத் தரப்படும்.

சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் விமானம் மூலம் எம்மால் அனுப்பி வைக்கப்படும்.

Rainbow Travels & Tours
32 1/2 Kasthuriyar Road,
Jaffna. T.P.: 021 222 3237.
(64954)


## கட்டாக்காலிக் கால்நடைகள் தொல்லையால் பயணிகள் சிரமம்

குடத்தனை,செப்.22

வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் கட்டாக்காலிக் கால்நடைகள் அதிகரித்துள்ளதால் பயணிகள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குடத்தனை பிரதான வீதி, பொற்பதி வீதி, மணற்காட்டு வீதி, அம்பன் வீதி ஆகிய பிரதான வீதிகளில் கட்டாக்காலிக் கால்நடைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றால் அவ்வீதிகளில் பயணிப்போர் பல்வேறு விபத்துக்களுக்கு ஆளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-78)

## திருமலையில் புதைகுழி

திருகோணமலை,செப்.22

திருகோணமலை தம்பலகாமம் பாலம் பட்டாறுப் பகுதியில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து மனிதப் புதைகுழி ஒன்று நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிவான் முன்னிலையில் புதைகுழி தோண்டப்பட்டது என்றும் இதன்போது ஒரு சடலம் அதிலிருந்து மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## குடத்தனையில் மாணவர்களுக்கு மாலைநேர வகுப்புகள்

குடத்தனை,செப்.22

குடத்தனை, பொற்பதி மற்றும் மணற்காடு ஆகிய இடங்களில் உள்ள மாணவர்களுக்கு மாலை நேர இலவச வகுப்புகளை யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியத்தினர் நடத்தி வருகின்றனர்.

இதேவேளை - இந்த ஒன்றியம் குடத்தனை, மாளிகைத்திடல், மணற்காடு, பொற்பதி ஆகிய இடங்களில் இலவச கணனி வகுப்புக்களையும் நடத்தி வருகின்றது. (202-78)


### வகுப்புகள்

G.C.E.(O/L) பரீட்சையில் திறமைச் சித்தி பெறுவதற்கும் மற்றைய வகுப்புகளுக்குமான ஆங்கில மொழி

கொழும்பு சர்வதேசக் கல்லூரி அனுபவ ஆசிரியரினால் யாழ். நகர் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: 65/23 மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். 0777110872

### தவறிவிட்டது

கடந்த 19.09.2007 அன்று கப்பல் பயணத்தின் போது தெல்லிப்பழையில், நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள முக்கிய ஆவணங்களுடன் கூடிய புத்தகப் பை ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் முக்கிய ஆவணங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்து தகுந்த சன்மானத்தைப் பெற்றுச் செல்லமாறு அன்புடன் வேண்டுகிறேன். தொடர்பு : ந.முருகதாசன், களபூமி, காரைநகர். (96053)

### இறைச்சிக் கோழி

புறொயிலர், கல்பேட், சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு New R.S.K. பாம், மான் பாடசாலை வீதி, உடுவில் New R.S.K. பாம், கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

### கோழிக்குஞ்சு விநியோகம்

புறொயிலர் குஞ்சு பதிவுசெய்தவர்கள் 22.09.2007 சனிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் Prima சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சு பதிவு செய்யப்படும். நல்லூர் பாம் , 19, முருகேசர் லேன், நல்லூர்.



## நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு 6ஆம் ஆண்டு



சின்னராசா துரைசாமி

தோற்றம் 12.12.1923
மறைவு 03.10.2006

துரைசாமி மாணிக்கரத்தினம்

தோற்றம் 22.12.1924
மறைவு 26.01.2001

திதி: 23.09.2007

ஆண்டு எத்தனை சென்றாலும் உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு என்றென்றும் நீங்காது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (23.09.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அரசடி,
தொண்டைமானாறு.

தகவல்:
வசந்தமல்லிகா குடும்பத்தினர்.



### வீடு வாடகைக்கு

கச்சேரி நல்லூர் றோட் (கச்சேரிக்கு மிக அண்மையில்) சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

இல. 49, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:
021 222 9057
0777238297

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர், தேவையான அளவுகளில் குறைக்கப்பட்ட விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

குமரன் பாம்
227, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
(நரிக்குண்டுக்கு அருகில்)
(64977)

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம்.

19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.



## 41ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கந்தையா தேவராஜா
(யூலன்)
(யாழ்.மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளி)

மண்ணில் 28.12.1978 விண்ணில் 13.08.2007

'இரக்கம் நிறைந்த இறைவா இவர்களின் குற்றங்களை மன்னித்து உமது வான் வீட்டில் இடமளித்தருளும்.'

இன்று (22.09.2007) சனிக்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திக்காக மரியன்னை பேராலயத்தில் 6 மணிக்கு திருப்பலியும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து உறவினர்கள், நண்பர்கள், சகபணியாளர்கள் அனைவரையும் மதிய போசனத்தில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

தகவல்:
பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், மேல்நீதிமன்றம் பின்புறம்,யாழ்ப்பாணம்.
தே.மேரி யறினா (மனைவி).



## COMPUTER COURSES

Admissions Open September 2007

New Batches Start on :
Batch 3 [ Weekend ] : 23.09.2007
Batch 4 [ Weekday ] : 24.09.2007
at 10.00 A.M.

Diploma in Software Engineering (4 Months)
Diploma in Internet Engineering (4 Months)
Diploma in Office Applications (3 Months)
Diploma in Hardware Engineering (4 Months)

கற்கைநெறிகளின் சிறப்புகள் :
- முழுமையான சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய விரிவுரை மண்டபங்கள், கணனி ஆய்வுகூட வசதிகள்.
- அனுபவம், தகுதி, திறமைவாய்ந்த விரிவுரையாளர் குழாமின் சேவை.
- இக்கற்கை நெறிகளில் இணைவதனூடாக இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, கனடா போன்ற நாடுகளின் சர்வதேச பல்கலைக்கழகங்கள், சர்வதேச உயர்கல்வி நிறுவனங்களில் உங்கள் கல்வியினைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள்

IIS CITY CAMPUS
# 200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தீஸ்வராக் கல்லூரிக்கருகில்)
Tel : 021 222 8060 Fax : 021 222 6933



## CARITAS - HUDEC
## கரித்தாஸ் - கியூடெக்

கரித்தாஸ் - கியூடெக்கால் பருத்தித்துறை கிழக்கில் கட்டப்படும் சுனாமி வீடுகளுக்கு கதவு, யன்னல், நிலை வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

கரித்தாஸ் - கியூடெக் இயக்குநரால் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்படும் கதவு, யன்னல், நிலைகளை வழங்கி பூட்டி விடுவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

இவ்வழங்கல்களுக்கான கூறுவிலை கோரும் விண்ணப்பப்படிவத்தினை எமது அலுவலகத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து நீள தபால் உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் *"கதவு நிலைகளுக்கான கூறுவிலை கோரல்"* என எழுதி இயக்குநர், கரித்தாஸ் - கியூடெக், 14, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 27.09.2007 (வியாழக்கிழமை) முன்பதாக கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும் அல்லது நேரடியாக வந்து அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடவும்.

27.09.2007 (வியாழக்கிழமை) காலை 10.30 மணியளவில் கூறுவிலைகள் பரிசீலிக்கப்பட்டு வழங்குநர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். சுனாமி வீட்டுத்திட்டத்தில் பங்கு பற்றும் நிறுவனங்களுக்கு ரூபா 30 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியான மேற்குறிப்பிட்ட கதவு, ஜன்னல், நிலைகளை வழங்கியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**A**

(I) 6' 6" x 3' 0" பிளஸ் கதவுகளும் அதற்குரிய நிலைகளும் (Flush doors) 23 எண்.

(II) 6' 6" x 2'9' அடைப்புக் கதவுகளும் அதற்குரிய நிலைகளும் (Panel doors) 92 எண்.

கதவுக்குரிய கிழாம்புகள் 4"இல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். கதவுகள் 1 1/8" தடிப்புள்ள பலகையில் செய்யப்படவேண்டும். நிலை கள் சீவப்பட முன் 4"x3" மரத்தில் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு கதவுகளுக்கும் கைபிடியுள்ள தரமான பூட்டு, 03 ஒக்ஸிடைஸ்ட் 10" வால் பிணைச்சல்கள். இரண்டு 6" ஒக்ஸிடைஸ்ட் திறாங்கு. நிலைகளுக்கு 02 இரும்புப் பட்டங்கள் (Hold fast) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**B**

(I) இரண்டு வெளி 4'x4' ஜன்னல். அதன் நிலை 4"x3" மரத்தில் செய்யப்பட்டு 1/2" விட்டமுள்ள தரமான கம்பிகள் 4" இடைவெளியில் பொருத்தப்பட்டிருத்தல்வேண்டும். (Panel window) - 69 எண்.

(II) 5 1/2' உயரம் 5அடி அகலம் உள்ள 3 வெளிகளுடனான லூவர் ஜன்னல். 3" கிழாம்புகளில் பார்வைக்கு தெளிவற்ற கண்ணாடி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். (Louver window) - 46எண்.

ஜன்னல்களுக்கு 4'x3" உள்ள ஒக்ஸிடைஸ்ட் பிணைச்சல்கள் 02,12" பித்தளை/ஒக்ஸிடைஸ்ட் இரும்பு (தரமான) நிறுத்தும் கொழுக்கி 01, பிடித்திழுக்கும் பித்தளை வளையம் 01, 4" பித்தளை திறாங்கு 02, பூட்டப்பட்டிருக்க வேண்டும். கதவு, ஜன்னல், நிலைகள் எல்லாம் பழுதற்ற முதற்தர மரத்தில் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

வணபிதா. C.G.ஜெயக்குமார்,
இயக்குநர், கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தெற்கின் அரசியல் போக்கை தீர்மானிப்பதில் வன்னியின் பங்கு

இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் யார் கையில் என்பதைத் தீர்மானிக்கும் திறமை - வலிமை - விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடமே உண்டு எனக் கொழும்புத் தலைவர்கள் நம்புகின்றார்கள். இந்த நாட்டில் அரசை அமைக்கவும், கவிழ்க்கவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் தென்னிலங்கைத் தலைவர்களுக்குத் தேவைப்படுகின்றார் என்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இந்தக் கருத்து ஊடாகத் தொனிக்கும் அம்சங்களை ஆராய்வது இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதே.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை மையமாக வைத்தே சிங்கள ஆளும் வர்க்கங்கள் காலங்காலமாகத் தமக்கிடையேயான அதிகாரப் போர்களை நடத்தி வந்திருக்கின்றன என்பதை இப்பத்தியில் ஏற்கனவே பலதடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

தமது அரசியல் செல்வாக்கையும் பதவி அதிகாரங்களையும் பலப்படுத்திக் கொள்வதற்காக தமிழர்களின் இனப் பிரச்சினையை இழுத்தடித்து, அவர்களின் உரிமைகளைப் பறிப்பதை அரசியல் சித்து விளையாட்டாக நடத்தி, அரசியல் காய் நகர்த்தல்களைத் தென்னிலங்கை அவ்வப்போது மேற்கொண்டு வந்தது என்பதே இந்தத் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தின் ஆரம்பகால சரித்திரம்.

அதாவது, தமது தென்னிலங்கை அரசியல் பொம்மலாட்டத்தில் தெற்கு அரசியல்வாதிகளின் கைஅசைவுக்கு ஏற்ப ஆடும் பொம்மைகளாகத் தமிழரின் தலைமைகள் விளங்கின. அது அந்தக் காலம்.

அது இப்போது மலையேறி விட்டது என்பதையே சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டும் கருத்துக்கள் எடுத்துக் கூறுகின்றன.

இப்போது வன்னியின் கையசைப்புக்கு ஏற்பவே தென்னிலங்கையின் அதிகார மாற்றப்போக்கு அமைகின்றது என்பதுதான் கொழும்பின் விசன நிலைமை.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா ஆட்சிப்பீடத்துக்கு ஏறிய காலமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது விடுதலைப் போராட்டத்தில் தமது தலைமைத்துவத்தை ஊன்றிப் பதித்து நிலைநிறுத்திய காலமும் ஏறத்தாழ - கிட்டமட்ட - ஒரே வேளைதான்.

அன்று முதல் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவத்தைத் தீர்மானிக்கும் விவகாரத்தில் பிரபாகரனின் சிந்தனைப் போக்கும் கணிசமான பங்களிப்பையும் செல்வாக்கையும் செலுத்தி வந்திருப்பதை நாம் ஊகிக்க - உணர - முடியும்.

நீண்ட - தசாப்த காலம் கடந்தும் - ஆட்சி நடத்தியிருக்க வேண்டிய ஜனாதிபதி பிரேமதாஸவின் அதிகாரம் வெறும் மூன்று ஆண்டுகளோடு முடிந்து போனதும் -

அவருக்கு மாற்றீடாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு வரக்கூடிய லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா, ரஞ்சன் விஜேரத்தினா போன்ற செல்வாக்குள்ள தலைவர்கள் உயிரிழந்து பலமான ஐ.தே.கட்சி வலிமையான தலைமைத்துவத்தை இழந்ததும் -

அதனால் அதுவரை செயலிழந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அப்போது தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்துக்குள் புது உத்வேகம் பெற்றுப் பீறிட்டுக் கிளம்ப, அதன் தலைமையை ஏற்ற சந்திரிகா குமாரதுங்க இலகுவாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியமையும் -

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய சந்திரிகா, இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட நேரத்தில் கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் ஒரு கண் பாதிப்புக்கு உள்ளான சந்திரிகாவுக்கு அனுதாப அலை அள்ளிக்கொட்ட ரணில் தோற்றுப் போனதும் -

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிக்கனி தமக்கே, அதிகாரம் தமது கைகளுக்கே என்று முற்று முழுதாக நம்பியிருந்த ரணில் விக்கிரமசிங்க, தேர்தலைத் தமிழர் தாயகம் பகிஷ்கரிக்க மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் மீண்டும் வெற்றியைக் கோட்டை விட்டு, பரிதாபமாக - நிரந்தரமாக - எதிரணியில் அமரும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டதும் -

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நேரடியான பங்களிப்புத் தீர்மானத்துடனோ அல்லது அவரின் பங்களிப்புத் தீர்மானம் இன்றியோ நடந்தேறிய நிகழ்வுகள்தாம்.

இப்போதும் கூட நாடாளுமன்றில் ஓர் ஆட்சி மாற்றம் நடக்க வேண்டும் என்றால் அதில் கணிசமான பங்கு வகிக்கக் கூடிய அளவில் 22 எம்.பிக்களையும் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூக்கணாங்கயிறு வன்னியில்தான் இருக்கின்றது என்பது அப்பட்டமான உண்மை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த - புலிகள் உடன்பாட்டின் கீழ்தான் மஹிந்த ராஜபக்ஷவினால் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்துடன் வெற்றியீட்டி ஆட்சிக் கதிரையைப் பிடிக்க முடிந்தது என்பது தென்னிலங்கை எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

அந்தக் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மையை அல்லது உண்மையற்ற தன்மையை அம்பலப்படுத்தி - வெட்ட வெளிச்சமாக்கி - மஹிந்தரின் ஆட்சியை ஸ்திரப்படுத்தியோ, அல்லது அதற்கு மாற்றாக பலவீனப்படுத்தி நிலைகுலைய வைத்தோ, தேவையான நிலைப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் சக்தியும் வன்னிக்கு இன்னமும் உண்டு என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

யுத்த களத்தில் தனக்குள்ள பலத்தைப் போல அரசியல் களத்திலும் தனது பலத்தைப் பிரயோகிக்கவும், தேவைப்படாத சமயத்தில் சுருட்டி, அடக்கி வைத்துக்கொள்ளவும் கூடிய வலிமையான நிலையில்தான் விடுதலைப் புலிகள் அமைப்பினரும் அதன் தலைவர் வே. பிரபாகரனும் இன்று உள்ளனர் என்பது தென்னிலங்கைக்கும் அதன் அரசியல் தலைமைத்துவங்களுக்கும் நன்கு தெரிந்த விடயங்களே.

# குருநகர் மீனவர்கள் தொழில் புறக்கணிப்பு; கடலில் மரணமானவருக்கு அனுதாபம் தெரிவித்து

குருநகர், செப். 22

குருநகர் மீனவர்கள் நேற்று தொழிலுக்கு செல்லவில்லை. யாழ். குடாக் கடலில் குருநகர் இறங்கு துறையில் இருந்து வெளிச்சக் கட்டைப்பகுதியை அண்டிய கடற்பகுதியில் மீன் பிடித்துவரும் மீனவர்களே நேற்று தமது தொழிலைப் புறக்கணித்தனர்.

யாழ். குடாக்கடல் பகுதியில் உள்ள கடற்பகுதியில் குருநகர் மீனவரான ஜெயரத்தினராஜா ரஜீன் (வயது 24) நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகி மரணமானதற்கு அனுதாபம் தெரிவித்தே மீனவர்கள் தமது தொழிலை நேற்று புறக்கணித்தனர்.

இறந்த மீனவரின் உடல் அடக்கம் செய்யப்படும் வரை தமது தொழிலைப் புறக்கணிப்பர் என குருநகர் மீனவர்களும் குருநகர் தொழில் சங்கங்களும் தெரிவித்துள்ளன.

கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது மீனவர் ஒருவர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமானது தொடர்பாக தாம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடப் போவதில்லை எனவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். யாழ் குடாக்கடலில் மீனவர்கள் பாதுகாப்பாக மீன் பிடிக்க படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குருநகர் இறங்கு துறையில் உள்ள படையினரிடம் தாம் நேற்று கோரிக்கை விடுத்ததாக குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள் உதயனுக்கு தெரிவித்தன. (அ-51)

## நாகர்கோயில் மாணவர்கள் படுகொலை நினைவுநாள் இன்று

குடத்தனை, செப். 22

நாகர்கோயில் மகா வித்தியாலயம் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டு மாணவர்கள் 25 பேர் பலியான 12 ஆம் ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் நாளன்று நண்பகல் 12.45 மணியளவில் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையில் இலங்கை விமானப் படையினர் பாடசாலை மீது தாக்குதல் நடத்தினர். 25 மாணவர்கள் பலியாகினர். அதே நாளில் விமானத் தாக்கு தலில் மேலும் 15 பேர் பலியாகினர். பாடசாலைக் கட்டடங்கள் தரைட்டமாகியதால் தற்போது கற்கோவளம் புனித நகரில் அது தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகளில் இயங்கி வருகின்றது. (அ-202-78)

## வடமராட்சிப் பகுதியில் போதியளவு மண்எண்ணெய் கையிருப்பில் உள்ளது

### பெற்றோலியம் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர்

வடமராட்சிப் பிரதேசத்துக்கு போதியளவு மண் எண்ணெய் ப.நே.கூ. சங்கங்களுக்கும் தனியாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் எஸ்.சண்முகநாதன் இவ்வாறு உதயனுக்கு தெரிவித்தார்.

வடமராட்சியில் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் மண்எண்ணெய்யை விட விவசாயிகள் மேலதிகமாக மண்எண்ணெய்யைபெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக வெளி யான செய்தி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இப்படிக் கூறினார்.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கூட்டத்திலும் இவ் முறைப்பாடு பிரஸ்தாபிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட பிரதேச செயலாளர், கமநல சேவைகள் ஆணையாளர் ஆகியோர் போதியளவு மண்எண்ணெய் அங்கு கையிருப்பில் இருப்பதாக தெரிவித்தனர் - என்றும் பிராந்திய முகாமையாளர் குறிப்பிட்டார். (அ-1)

## நீர்வேலி அத்தியார் இந்துவில் இன்று நிறுவுநர் தினம்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் அருணாசலத்தின் நினைவு தினமும் பரிசில் நாளும் இன்று சனிக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ. குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வே. தி. செல்வரட்ணமும் சிறப்புவிருந்தினர்களாக இளைப்பாறிய பிரதி அதிபர் கலாநிதி தா. அமிர்தலிங்கம், நல்லூர், கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை பழைய மாணவர் சங்க செயலாளரும் வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளருமாகிய த. நடராசா நிகழ்த்துவார். (1-72)

## உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணி இங்கு இல்லை

யாழ்ப்பாணம், செப். 22

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணி யாழ்ப்பாணத்தில் இடம்பெறமாட்டாது. கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தப் பணி கடந்த 14ஆம் திகதி தொடக்கம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. அதற்கானவள அணியினரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

விடைத் தாள் திருத்தும் பணியை ஐந்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பகிஷ்கரித்ததால், குறிப்பிட்ட தினத்தில் அந்தப் பணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவில்லை.

கொழும்பில் தற்சமயம் இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டபோதும், யாழ்ப்பாணத்தில் அந்தப் பணியை நடத்துவதில்லை என்று பரீட்சைத் திணைக்களம் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# நிரந்தர சமாதானம் வேண்டி மாதர் நேற்று ஆர்ப்பாட்டம்



கொழும்பு, செப்.22

நாட்டில் நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி - சர்வதேச சமாதானத் தினமான நேற்று - மகளிர் அமைப்புகள் சில தமக்குள் ஒன்றிணைந்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின. கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டு சமாதானம் வேண்டிக் கோஷங்களை எழுப்பினர். சமாதானத்தை நினைவுபடுத்தி கேளிக்கை நடனம் ஒன்றையும் அவர்கள் அங்கு நடத்தினர்.

'யுத்தம் அல்ல சமாதானம்', 'மரணம் அல்ல வாழ்வே', 'இதய பூர்வ முகமலர்ச்சி சமாதானத்தின் ஆரம்பம்','இன்றே சமாதானம்', சமாதானத்திற்கு வாய்ப்பளிப்போம்', 'யுத்தத்திற்கு எதிராகச் செயற்படுவோம்', 'வேண்டாம் யுத்தம்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி நின்று பல பெண்கள் கோஷம் எழுப்பினர்.

பிற்பகல் 1 மணியளவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (சி)

## நாளை மின்தடை வரும்; நகரை அண்டிய பகுதிகளில்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ். நகரை அண்டிய சில பகுதிகளில் அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை மின்விநியோகம் தடை செய்யப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நக்காவீதி, நல்லூர், கச்சேரி,சுண்டுக்குழி, கொழும்புத்துறை, பாசையூர், ஈச்சமோட்டை, விஞ்ஞான பீடம் ஆகிய பிரதேசங்களிலேயே மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது. (அ-1)

### நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 6 | ஞாயிற்றுக்கிழமை 23.09.2007 |
| திதி : ஏகாதசி | முற்பகல் 07.44 |
| நட்சத்திரம் : | திருவோணம் முன்னிரவு 06.32 |
| சுபநேரம் | : 09.02 - 10.32 |
| ராகுகாலம் | : 04.32 - 06.02 |

## கல்முனையில் கிளைமோரில் பொதுமகன் உயிரிழப்பு

அம்பாறை, கல்முனையிலுள்ளசாவல் காட்டுப் பகுதியின், மண்டூர் வீதியில் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் காயமடைந்திருக்கின்றனர்.

இனிப்புப் பண்ட விநியோக வண்டி ஒன்றே இந்தத் தாக்குதலில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவதில் காயமடைந்தவர்கள் கல்முனை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.(சி)

## உயிர் அச்சுறுத்தல்; நேற்றும் இருவர் சரண்

யாழ்ப்பாணம், செப். 22

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இரு குடும்பஸ்தர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர். மீசாலையைச் சேர்ந்த 31 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரும், கொக்குவிலைச் சேர்ந்த 25 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவருமே இவ்வாறு சரணடைந்துள்ளவர்களாவர்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (அ-68)

## பருத்தித்துறையில் நேற்று கிரனேட் வீச்சு

பருத்தித்துறை, செப். 22

பருத்தித்துறை, ஓராங்கட்டைப் பகுதியில் பணியில் இருந்த படையினர் மீது நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலை அடுத்து அந்தப் பகுதியை படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. எனினும் அதை உறுதி செய்யமுடியவில்லை. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச சமாதான தினத்தையொட்டி போருக்கு எதிரான தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஏற்பாட்டாளர் குமார் ரூபசிங்க உரை நிகழ்த்துவதையும், கலந்துகொண்ட முக்கியஸ்தர்களையும் படங்களில் (சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. , மனோ கணேசன் எம்.பி. ஆகியோரும் உள்ளனர்) காணலாம்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*மழை காலத்துக்கு முன்பு மீளக் குடியமர்த்த வன்னி எம்.பி. கடிதம்*

இதேவேளை -

மக்களின் பரிதாப நிலை குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவசர கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; முசலிப் பிரதேச கிராமங்களை நோக்கி முன்னேறிய படைகள் எவ்வித சிரமமோ இழப்போ இல்லாது அந்த கிராமங்களை தம்வசமாக்கிக் கொண்டன. படையினர் இந்தப் பிரதேசங்களுக்குள் பிரவேசித்த போது, கிராம மக்கள் அனைவரும் தங்கள் கிராமங்களில் வசித்தனர்.

ஆயினும் இந்த மக்கள் படையினரின் வேண்டுகோளுக்கு இணங்க தங்கள் கிராமங்களை விட்டு பெரும் சிரமத்துடன் இடம் பெயர்ந்தனர்.

எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் இழப்புகளும் இல்லாமல் முன்னேறி தம் கிராமங்களை வந்தடைந்த படையினர், அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் வெளியேறும்போது தமது வீடு வாசல் சொத்துக்களைப் பாதுகாத்து வைத்திருந்து தம்மிடம் ஒப்படைப்பர் என்ற சிந்தனையும் எதிர்பார்ப்பும் உடையவர்களாவே கிராமங்களை விட்டு வெளியேறினர்.

இடம் பெயர்ந்துள்ள மக்கள் நானாட்டான், முருங்கன் ஆகிய பகுதிகளில் உள்ள பாட சாலைகள், தேவாலயங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

அடிப்படை வசதிகள் ஏதும் இன்றி அந்த மக்கள் இன்னல்களை அனுபவித்துகொண் டிருக்கின்றனர்.

*ஒருமாதமாகியும் அனுமதி மறுப்பு*

அவர்கள் இடம் பெயர்ந்து ஒரு மாதத்தை அண்மித்த போதும் சொந்த கிராமங்களுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள் ளது. தமது ஜீவனோபாயத் தொழில்களான கடற்தொழில், விவசாயம் ஆகியவற்றை இழந்த நிலையில் பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர்.

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழைக்கு முன் னர் அவர்கள் தமது சொந்த கிராமங்களில் மீளக்குடியேற்றப்படாவிட்டால், பெரும் அவஸ்தையை சந்திக்க நேரும்.

இந்த மக்களின் பரிதாபநிலையை அனுதாபத்துடன் பரிசீலனைக்கு எடுத்து, மழை காலம் ஆரம்பிக்கு முன் மீள் குடியமர்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன் - என்று உள்ளது. (அ-1)

WE ARE NOT BIG BUT THE BEST
We are not 1's in 10 or etc
We Headed with An Indian Engineer
We tuned our Pc's with World's best Main Boards like Foxconn, Asus, AsRock and Intel Original
IBM Desktop Pc's mostly Tuned with Foxconn Main Boards
உலகத்தரம் உங்களுக்காக நமது தெரிவில்
One Step Ahead in Technology
IBM HP
3 Years Complete Warranty
Refurbised P4 System
Samsung Branded Imported from Korea
Rs.25000/- Onwards
New Intel PC Complete Set
39900/- Only
UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 0773134...

## சன் நடமாட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை சமர்ப்பித்தனர்.

சடலத்தை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கும்படியும் பத்திரிகை மூலம் அறிவித்து சடலத்தை இனம் காணும் படியும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ- 1-68-50)

## வடமராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை அடுத்தமாதம் 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஒன்பது பேரும் நேற்று மீண்டும் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஒரு பெண்ணையும் இரு ஆண்களையும் மேலதிக விசாரணைக்காக தம்மிடம் ஒப்படைக்க அனுமதி வழங்குமாறு நீதிவானிடம் பொலீஸார் கோரியுள்ளனர்.

இதற்கு அனுமதி வழங்கிய நீதிவான், விசாரணை நடத்தி 24 மணிநேரத்துக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (அ-1)

## விசுவமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது நாளாந்தம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டு இருந்ததாக விமானப் படையினருக்குத் தகவல்கள் கிடைத்தன என்றும் -

இதனையடுத்து விமானப் படையினர் அந்த இலக்கின் மீது விமானத் தாக்குதல்களை நடத்தி புலிகளுக்கு சேதத்தை ஏற்படுத்தினர் என்றும் - விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார். (அ-5)

## அரசு மீதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான சம்பவங்கள் காரணமாக மஹிந்த அரசுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் கடும் கண்டனமும் எதிர்ப்பும் கிளம்பி யுள்ளமை தெரிந்ததே.

அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக பல்வேறு சர்வதேச அமைப் புகள் ஏற்கனவே போர்க்கொடி தூக்கி நிற்கின்றன.

இந்தப் பின்னணியிலேயே ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றச் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கே சர்வதேச சமூகத்தை நேரடியாக எதிர்கொள்ளவிருக்கின்றார்.

''சர்வதேசம் இப்போது உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடி வருகின்றது. அதுபோலவே இலங்கையும் உலகின் மிக மோசமான பயங்கரவாத இயக்கத்தின் சவாலை எதிர்கொண்டு போராடுகின்றது. இந்நிலையில் இலங்கை அரசுக்கு எதிராக மனித உரிமைக் குற்றச்சாட்டுகள் வேண்டுமென்றே சில தரப்புகளால் ஊதிப் பெருப்பித்துக் காட்டப்படுகின்றன. அவற்றில் எந்த உண்மையும் இல்லை. இலங்கைப் படைகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதில்லை. ஒழுக்கத்திலும் நன்நடத்தையிலும் உலகில் சிறந்த படைகளாக இலங்கைப் படைகள் உள்ளன.

''அரசு அமைதி வழியில் தீர்வு ஒன்றை எட்டவே முயல்கிறது. ஆனால் பயங்கரவாதிகளான புலிகளே அதற்கு முட்டுக்கட்டையாக உள்ளனர். அதனால்தான் அவர்களை இராணுவ ரீதியில் கையாள வேண்டியுள்ளது. இதனை மனித உரிமை மீறலாக சிலதரப்புகள்வேண்டுமென்றே அர்த்தப்படுத்து கின்றன. இதனை சர்வதேசம் அடையாளம் காணவேண்டும்.

''உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்துக்கு சர்வதேசம் உதவுவது போல இலங்கை நாட்டுக்குள் ஒரு குழுவினர் மேற்கெள்ளும் பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கை அரசு நடத்தும் போராட்டத்துக்கும் சர்வதேசம் ஒத்துழைப்பும் உதவியும் தந்து, அந்தப் பயங்கரவாதத்தைத் துடைத்தழிக்க உதவவேண்டும்.'' - இந்தச் சாரப்பட ஜனாதிபதியின் உரை அமையும் எனத் தெரியவந்தது. (சி)

அனைத்து மாணவர்களுக்கான
காலை, மாலை நேர
கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்
Start On :- 22.09.2007
மேலதிக விபரங்களுக்கு நேரில்
Softview Computer College
55, Arasady Road,
Jaffna. T.P. 021 2225170

## ஞாயிறும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயண அனுமதிப் பத்திரம் (Token) பெற்றவர் களை எதிர் வரும் புதன்கிழமை பயணத்தை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-1)

## 4 நிதித்திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சினால் முன்வைக்கப்பட்ட நான்கு நிதி திருத்தச் சட்டங்கள் மீது மீண்டும் குழு நிலை விவாதம் நடத்தப்படவேண்டும். அதன் பின்னரே சபையின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி அரசு ஐந்து நிதி திருத்தச் சட்டங்களை சபையில் முன்வைத்தது.

அவை வருமாறு:-

* 256 ஆம் இலக்க நிதி திருத்தச் சட்டம்.
* 257 ஆம் இலக்க நிதி திருத்தச் சட்டம்.
* பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு நிதி திருத்தச் சட்டம்.
* உற்பத்தி தீர்வை விசேட ஏற்பாடுகள் திருத்தச் சட்டம்.
* விசேட வியாபார பண்ட அறவீடுகள் சட்டமூலம்.

இவற்றின் மீது விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது சபையில் விரும்பத்தகாத நிகழ்வுகள் இடம்பெற்றன.

எனினும், 256 ஆம் இலக்க நிதி திருத் தச் சட்டம் முறைப்படி வாக்கெடுப்பு நடத் தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

ஆனால் ஏனைய நான்கு சட்ட வரைவு கள் மீது முறைப்படி வாக்கெடுப்பு நடத்தப் படவில்லை; குழு நிலையில் விவாதிக்கப் பட வில்லை; மூன்றாவது வாசிப்பும் இடம்பெறவில்லை.

அதற்கான வாய்ப்பும் சந்தர்ப்பமும் ஏற் புடையவையாக அப்போது அமைய வில்லை.

இக்கட்டான ஒரு நிலையில் வாய்மூலம் சட்டமூலங்கள் அங்கீகரிக்கப்பட்டன என நான் கூறியிருந்தாலும் அவை சட்டங்களாக அங்கீகரிக்கப்பட மாட்டா.

எனவே இரண்டாம், மூன்றாம், நான் காம், ஐந்தாம் நிதித் திருத்தச் சட்டங்கள் மீது மீண்டும் குழுநிலை விவாதம் நடத்தப் பட்டு மூன்றாவது வாசிப்பின் பின் வாக் கெடுப்பு நடத்தப்படவேண்டும் - என அறி வித்தார் சபாநாயகர்.

இவ்விடயம் தொடர்பாக கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பேசி பொருத்தமான தினத்தை தெரிவுசெய்து இதனை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

சபையின் இரு தரப்பினரும் இதனை ஏற்றுக்கொண்டனர்.

இந்த நான்கு சட்டமூலங்களும் நிறை வேற்றப்பட்ட முறைமை தவறு எனஜே.வி.பி., ஐ.தே.கட்சி போன்ற எதிர்க்கட்சிகள் ஏற்கனவே தெரிவித்து வந்த சர்ச்சைக்கு சபாநாயகரின் இந்த முடிவால் தீர்வு கிட்டியிருக்கின்றது. (சி)

## சட்டத்தரணிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தளபதி தெரிவித்த விடயங்கள் குறித்து யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

* தொலைபேசி மூலம் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை அச்சுறுத்தல் விடும்போது அந்த இலக்கத்தை இனங்காண முடியாது. தொடர்ந்து பல தடவைகள் அச்சுறுத் தல் வந்தால் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அந்தத் தொலை பேசி இலக்கத்தை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கலாம்.
* வீடுகளுக்கோ, அலுவலகங்களுக்கோ நேரில் வந்து அச்சுறுத்தல் விடுத்தால்- அது பற்றி அறிவித்தால் உரிய பாதுகாப்பை வழங்க முடியும். வீட்டுக்கோ, அலுவலகத் துக்கோ படையினரின் பாதுகாப்பை வழ்ங்கி சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கமுடியும்.
* பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் விடுத்த உத்தரவுகளுக்கு அமைய சட் டத்தரணிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தளபதி தெரிவித்தார் என்று அவர் கூறினார்.

இந்த விடயங்கள் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நீதி மன்றத்தில் சகல சட்டத்தரணிகளும் கூடி, பகிஷ்கரிப்பை நிறுத்திக்கொள்வது குறித்து முடிவு செய்வர் என்று சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கக் கோரி குடாநாட்டில் உள்ள சட்டத்தரணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (சி)

## மரண அறிவித்தல்

### *தர்மலிங்கம் கோகுலவேந்தன் (வேந்தன்)*



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அரசடி சந்தி, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் கோகுலவேந்தன் 20.09.2007 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அமரர்களான தர்மலிங்கம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், லீலாதேவி, ஈஸ்வரி, தனம், அமரர் தர்மகுலவேந்தன், நேமிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தையலம்மையின் பெறாமகனும், லெட்சுமணனின் மருமகனும், கந்தசாமி, குமார், சிவலிங்கம், சுகி ஆகியோரின் மைத்துனரும் தீபா, சுபாசினி, நதீசன், கிருதீசன், சாரங்கன், அனுசன், அமரர் காயத்திரி மற்றும் டினோத், பானுஜன், யதுகாந், பிரபுராஜ், கீர்த்தனா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைள் நாளை (23.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி சந்தி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (66074)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.